ஓம் தத் சத்

ஸ்ரீ பிரஹ்மணே நம:

# காரியசித்தியின் இரகசியம்.

இஃது

லக்ஷண லக்ஷிய வேதாந்த தர்சன ப்ரபோதகாசிரியர்

வித்வான் ஸ்ரீமான்

கோ. வடிவேலு செட்டியாரவர்கள்

மாணவர்களில் ஒருவராகிய

ச. கந்தசாமி முதலியாரவர்களால்

எழுதப்பட்டது.

கிடைக்குமிடம்:-

அம்பாவிலாச புத்தகசாலை,

கோமளேசுவரன்பேட்டை, சென்னை.

1923

காப்பிரைட்.] [விலை அணா மூன்று.

# நற்சிறப்புப் பாயிரம்.

சச்சிதா னந்தத் தனிப்பரம் பொருளை
உச்சித மாக நச்சிரின் றேத்தி
எந்தை எங்குரு என்மல மிரிய
வந்தெனை யாண்ட வரவடி வேலன்
பதமலர் மனத்திடைப் பாங்குட னிறுவி
உலகெலாந் திரைகொண் டுயர்வே தாந்த
கலமிகு வெண்குடை நாணில நிழற்றிய
இகழொளி ராம தீர்த்தப் பெயரினன்
ஆங்கில மொழியி னளிகொண் டுறைந்த
இருசொற் பெருக்கி னுட்கிடை யதனைக்
காரிய சித்தியி னிரகசியப் பெயராற்
றமிழி லெழுதினன் றகுந்தமிழ் வல்லீர்
குற்றம் பொறுத்துக் குணங்கொள் வீரே.

U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR MADRAS

உ

# காரியசித்தியின் இரகசியம்.

## முன்னுரை.

எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்''

([illegible])

சுவாமி இராமதீர்த்த [illegible] ஜய
ண்டாவதாக. [illegible] நிறைந்த [illegible] பிள்ளைப்
பெண்ணுடைமையாகிய நலத்தைப் படைத்திருக்கிறார்; சிலர் தூச்
செல்வமுடைய மக்களைப் பெற்றோர் என்று வழங்குகிறார்; சில
ர் செய்தொழிற் பயனில்லையென இளைக்கிறார்கள்;
வறுமையென்னும் கஷ்டமானவர் என வருந்துகிறார்கள்;
இவ்வருமை [illegible] கேட்டுப் [illegible]
உங்களுக்கிருக்கின்றன. சுவாமி இராமதீர்த்த ஸ்வாமிகளது
வாக்குகளை ஆதாரமாகக் கொண்டே இப்புத்தக விஷ
யங்கள் எழுதப்படுகின்றன. அவற்றால், நீங்கள் காரிய
சித்தியடைய வேண்டுமென், என்னசெய்தல் வேண்டுமென்
பதைக அறியலாம். காரியசித்தியைப் பெற விரும்பி

பலையும் அநேகர்க்குப் பின்வரும் விஷயங்கள் காரிய சித்தி
யையும் சார்த்தியையும் கொடுக்கும். நீங்கள் முதலிலேயே
அபிப்பிராயங்களில் சந்தேகப்படாமல், சொல்லிய வண்
ணம் செய்வீர்களாயின், உலகில் உங்களைப்போல் பாக்
கியவான்கள் இருக்கமாட்டார்கள்.]

ஒரு வேலையைத் திறமையுடன் செய்து முடித்த
லும், அதற்காதாரமான விஷயங்களை யறிந்திருத்தலும்
ஆகிய இவற்றை யோசிக்கின், அவை தம்முள் வேறுபாடு
உடையனவேயாம்; ஆகலின், ஒருவன் தற்காலத்தில்
காரியசித்தியுடன் காரிய நிருவாகம் செய்துவரினும்,
தான் நிருவகிக்கும் காரியத்தின் விஷய ஞானமுடைய
வனா யிராவிடின், பின்னொரு காலத்தில் தன் நிலை
தவறிக் கஷ்டப்படல்கூடும். மருந்துகளைக் கைமுறை
யாகப் பாகம் செய்வதில் திறமையுள்ளவன் வைத்
திய னாகான்; ஒரு நீராவி இயந்திரத்தைத் திறமையாக
நடத்துபவன் இயந்திர விதிகளை எல்லா மறிந்த வித்துவா
னல்லன். ஆகவே, சரியான விஷயஞானமும், சரியான
பழக்கமும் ஒருங்கு சேர்ந்தாற்றான் நன்மை யுண்டா
மென்ப தொருதலையாம். காரியசித்தியின் இரகசியம்
ஏறக்குறைய எல்லாரும் அறிந்ததேயாம்; ஆயினும்,
அதனை 'அப்பியசிப்பதா லுண்டாகும் நன்மையை யுண
ராது பாராமுகமாய் இருப்போர் மனதில் அதனைப் புகுத்
துவது மிக முக்கியமும் நன்மை பயக்கக்கூடியதுமாம்.

# 1—வது இரகசியம்.

## முயற்சி.

" அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."

(இதன் பொருள்:—ஒருவன் தனது சிறுமையை நோக்கி நான் இத்தொழிலை முடித்தல் அருமையை யுடையதென்று நினைத்துத் தளராதிருத்தல் வேண்டும்; அத்தொழிலை முடித்தற்கு ஏற்ற பெருமையை முயற்சி அவனுக்கு உண்டாக்கும்.

ஒருவன் முயற்சியுள்ளவனா யிருப்பானாயின், தான் விரும்பியதை யடைவான்; அவனுக்குச் சகல சம்பத்துகளும் காரியசித்தியும் உண்டாம். முயற்சியுடையவன் இகழ்ச்சி யடைவதில்லை. முயற்சி யில்லாதவனோ யாதொரு காரியத்தையும் சாதிக்க முடியா திகழ்ச்சி யடைவன். அவனை நடைப்பிணமெனல் சாலப் பொருந்தும்.

நீங்கள் முயற்சியின் சிறப்பையும், சோம்பலின் தாழ்வையும் அறியவேண்டுமாயின், சுவாமி இராமதீர்த்தர் சொல்வதுபோல, ஓடிக்கொண்டிருக்கும் நதியையும் நிலைநீருடைய குட்டையையும் பாருங்கள். ஓடிக்கொண்டிருக்கும் நதியின் நீர் எப்பொழுதும் தெளிவாயும், சுத்தமாயும், விரும்பத் தக்கதாயும், குடிக்கக் கூடியதாயு மிருக்கிறது; அப்படியே யிடாமல் வேலை செய்து கொண்டிருக்கும் முயற்சியுடையோன் புத்திப் பிரகாசமுடையவனாகவும், காரியசித்தி யுடையவனாகவும், பலரால் விரும்பப்படுபவனாகவு மிருப்பான். குட்டையி லிருக்கும்

இடைவிடாது கலக்கமுறுவதாயும், அசையாயும், தூர்வாசனை யுள்ளதாயும், அருவருக்கத் தக்கதாயும், எருமைகள் படுத்துப் புரளுவதற்கிடமாயு மிருக்கிறது; அதுபோல, சோம்பலுடையவன் பூமிக்குப் பாரமாயும், மந்த புத்தியுடையோனும், கெட்ட குணங்களையும் நடத்தைகளையும் உடையவனும், பிறர்க்கு ஆகாதவனும், ஒரோவிடத்துக் குடியர் முதலிய இழிந்தமையோரின் சிநேக முடையவனும், சதா துக்காக்கிராந்தனுமா யிருப்பான்.

பற்றில்லாமல் முயற்சியுடையவனா யிருத்தல் உத்தமமான சத்துவமாம். பலனைக்கருதி வேலைகளைச் செய்தல் மத்திமமான இராசதமாம். சோம்பலாயிருத்தல் அதமமான தாமசமாம். ஐயகோ! இத்தமசைத் தமக்கிருப்பிடமாகப் பெற்றிருப்பவர் எக்காலில் தான் முன்னேறுவரோ? அதனை ஈசனே யறிவான்! நீங்கள் காரியசித்திபெறவேண்டுமாயின், வேலை செய்யுங்கள்; எப்போதும் வேலை செய்யுங்கள். சோம்பலாயிருந்து போகங்களையனுபவிப்பதிலேயே தன்னெண்ணத்தைச் செலுத்துபவன் உலகத்தில் பிரகாசமடைவதில்லை. உதாரணமாக:—பிரகாச சொரூபமாகிய விளக்கின் செய்கையையுற்றுப்பாருங்கள். அது தன் வர்த்தியையும் எண்ணெயையும் செலவழித்துக் கொண்டே யிருக்கும் வரையில் பிரகாசமா யிருக்கிறது; எண்ணெயையும் வர்த்தியையும் செலவழிக்காவிடின் அவிந்து விடுகின்றது. அப்போது நமக்கு இருளன்றிப் பிரகாசங் காணப்படுவதில்லை. தன்னுடம்பையும் எலும்பையும் தேய்க்கிறவன் பலனும் காரியசித்தியுமடைந்து உலகில் பிரகாசிக்கிறான். தேக சுகத்தையே அதிகமாகக் கருதி

வளமான சாப்பாட்டையும் தூக்கத்தையுமே கண்ணாகக் கொண்டிருப்பவன் காரியசித்தியின்றி இழிவடைகின்றான்; அதுவேயுமன்றி, அவன் விரும்பும் தேகசுகமும் அவனுக்குக் கிடைப்பதரிதாகி விடுகிறது. ஆனால், வர்த்தியை அதிகமாகத் தூண்டிவிட்டால் சீக்கிரத்தில் விளக்கின் எண்ணெய் குறைவதுபோல, பணப் பேராசையால் தேகத்திற்கு அளவிற்கு மிஞ்சின சிரமந் தொடுப்போமாயின், தேக சுகமுங் குறையும். காமுகனுக்கும் முயற்சியிற் சிறந்தோனுக்கும் வித்தியாச மென்னவெனின், காமுகன் இரவில் விழித்திருந்து பகலில் தூங்குவன்; முயற்சி யுடையோனுக்கோ இராப்பக லிரண்டு வேளையும் தூங்க நேர மகப்படுவதில்லை. இப்படிச் சொல்வதனால், இயற்கைக்கு மாறாக இரவிலும் விழித்திருந்து வேலை செய்ய வேண்டுமென்பது கருத்தல்ல. "அதிக நேரம் தூங்குபவனும், தூங்காமலே யிருப்பவனும் நன்மையடைவதில்லை" என்பது பகவத்கீதை 6-வது அத்தியாயம் 16-வது ஸ்லோகத்தால் பெறப்படுவதாம். சுக வாழ்விற்குத் தூக்கம் அவசியமாம். ஒருவன் குறைந்த பக்ஷம் ஆறு மணி நேரம் தூங்குதல் வேண்டும்; அதிக பக்ஷம் ஒருநாளில் மூன்றில் ஒருபங்கு அஃதாவது எட்டு மணி நேரம் தூங்கலாம். ஒரு நாளில் பதினாறுமணி நேரம் ஓய்வில்லாமல் வேலை செய்தல் முடியுமா? "ஒரு நாளில் ஆறுமணி நேரமே வேலை செய்தல் வேண்டும்" என்று தொழிலாளிகள் கேட்பது மடமையோ? என்னும் கேள்வி யுண்டாகலாம். "நீங்கள் நாள் முழுவதையுமே ஓய்வாக எடுத்துக் கொள்ளலாம்" என்பதே அதற்குப் பதிலாம். ஆனால் "ஓய்வு" என்பது

என்னவென்பதை முன்னே தெரிந்து கொள்ளுங்கள். நாளெல்லாம் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு படிக்கும் மாணவர்களுக்கு மாலையில் தேகாப்பியாசம் செய்தல் ஓய்வாம்; நாளெல்லாம் தேக சிரமப்பட்டு உழைக்கும் தொழிலாளர்களுக்கு மாலையில் அறிவு கொடுக்கக்கூடிய புஸ்தகங்களை வாசித்தல் ஓய்வாம். ஒருவன் தேகத்தினாலும் மனத்தினாலும் வேலை செய்கிறான்; தேக சிரமத்தை மாற்றி மனத்திற்கு வேலை கொடுத்தலும் மனோசிரமத்தை மாற்றித் தேகத்திற்கு வேலை கொடுத்தலும் ஓய்வாம். ஓய்வென்பது சோம்பேறியாய் உட்கார்ந்து கொண்டிருப்பதன்றாம். இனி, சுவாமி இராமதீர்த்தரோ "வேலையே ஓய்வு" என்கிறார். இதன் அர்த்தம் மிக சூக்ஷ்ம புத்தி யுடையவர்க்கே தெரியவரும். "நான் செய்கிறேன்" என்னும் எண்ணமில்லாமல் செய்யும் எல்லா வேலையும் ஓய்வு மயமேயா மென்பது அவரது அபிப்பிராயமாம்.

இருபத்தாறு வயதிற்குள் பி. ஏ. (B. A.) பட்டமும், கணக்கில் எம். ஏ. (M. A. in Mathematics) பட்டமும் பெற்று, கலாசாலைப் போதகாசிரியராகவு மிருந்து, காட்டிற்குப் போய்ச் சந்நியாசமும் பெற்ற நமது சுவாமி இராமதீர்த்தர் தாம் மாணாக்கராக இருந்தபொழுது, அடிக்கடி இரண்டு அல்லது மூன்று நாளைக்குக்கூடப் பட்டினியாய்க் கிடக்க நேரிட்ட அவ்வளவு வறுமையான நிலையிலிருந்தனர்; அங்ஙனமிருந்தும் அடிக்கடி அரை வயி றாகாரத்தோடு பாதிராத்திரிவரையில் கணக்குப் போட்டுக்கொண்டிருப்பதும், சில சமயம் நேரமாவதுந் தெரியாமல் பொழுது விடியும் வரை படித்துக்கொண் டிருப்பதும் அவர்க்கு வழக்கமா யிருந்தன.

ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயர் தம் இளமைப் பருவத்தில் தெருக்களிலிருக்கும் தீப ஸ்தம்பங்களின் வெளிச்சத்தில் தமது பாடங்களை வாசித்தார். வாசிப்பதற்கு விளக்கும் கிடைக்காத தரித்திரரொருவர் உயர்தர நீதி மன்றத்து நியாயாதிபதியாக வருவதாயின், அவருடைய முயற்சியின் பெருமை என்னை!

பாரதம் (தமிழ்க்கவியில்)பாடிய நல்லாப்பிள்ளையவர்கள் தமது இருபத்தைந்துவயதிற்குமேல் தமிழெழுத்துக்களைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். அரிச்சுவடி முதற்கொண்டு நிகண்டுகள், நன்னூல், தொல்காப்பியம் முதலிய தமிழுக்குரிய இலக்கிய இலக்கணங்களை எல்லாம் இரண்டு வருட காலத்துக்குள் படித்து முடித்த அவர், தமது ஆசாரியர் வீட்டில் சோதனைப்பொருட்டு வட்டிக்கப்பட்ட வேப்பிலைப்பதார்த்தங்களையே கசப்புத்தெரியாமல் இரண்டு வருடகாலம் உண்டுவந்தாரென்று சொல்லப்படுகின்றது. இதனால், "மெய் வருத்தம்பாரார், பசி நோக்கார், கண்துஞ்சார் * * * கருமமே கண்ணாயினார்" என்பது உண்மையாய் விளங்குவதாம்.

மேல் நாட்டில் ஒரு ஏழைப் பையன் சாயங்காலங்களில் வீட்டுப் பலகணிகளின் மூலமாய் வரும் வெளிச்சத்தில் நின்று வாசித்துக் கொண்டிருந்து, அவை மூடப்பட்ட பொழுது, ஒரு கையில் புத்தகத்துடன் தெருத் தீபஸ்தம்பங்களின் மீதேறி ஒரு கையில் புத்தகமும் மறுகையில் ஸ்தம்பமுமாகத் தொங்கிப் படித்துப் பின் பலர் மதிக்கும் வித்துவானாயினன். இதனால், விடா முயற்சி யுடையவன் காரியசித்தி யடையாமற் போவதில்லை என்பது புலனாகும்.

இரவில் எல்லாரும் கண்படைகொண்டு சப்த மின்றியிருக்கும் சமயத்தில் விளக்கெதிரே புத்தகத்துட னுட்கார்ந்திருக்கும் அநேகரையும், காலை ஒன்பது மணிக்குப் படுக்கைவிட் டெழுந்திருக்கும் ஒன்றுக்கு முதவாத பலரையும் நான் கண்டிருக்கிறேன். வேலை செய்ய நேர மகப்படவில்லை என்று அநேகர் வருந்தும் அதே சமயத்தில், முழங்காலைக் கட்டிக்கொண் டுட் கார்ந்து வீண் வார்த்தை பேசுபவரும், பகலில் முக்கா டிட்டுத் தூங்குபவருமாக எத்தனைபே ரிருக்கின்றனர்!

ஒருவன் இவ்வுலகில் செல்வம், வித்தை, கீர்த்தி, மரியாதை, மதிப்பு முதலிய இவற்றைப் பெறவேண்டு மாயின், அவற்றைப் பெறுதற்குரிய முயற்சியையே செய்தல் வேண்டும். ஒருவன் முயற்சி செய்யாமல் ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வெண்ணுவது, அரிசியில் லாமல் சாதம் சமைக்க எண்ணுவதொக்கும். "சும்மா இருந்தால் சுகமுண்டு" என்று சொல்லும் பரம வேதாந் திகளும் சும்மாயிருத்தலிலும் நைஷ்கர்மியசித்தி யடை யும் பொருட்டுப் பெரு முயற்சி செய்கின்றனர்.

ஸ்ரீகிருஷ்ண பகவான் பகவத்கீதை 3-வது அத்தி யாயம் 8-வது ஸ்லோகத்தில் "* * * கர்மம் செய்யா திருப்பின் தேகத்தை நடத்துவது (காப்பாற்றுவது) கூட உனக்குச் சாத்தியமாகாது" என்று முயற்சிக் குறைவினு லுண்டாகும் கஷ்டத்தையும், 4-வது அத்தியாயம் 12-வது ஸ்லோகத்தில் "* * * மனுஷ்ய லோகத்தில் கர்ம பலன் சீக்கிரமா யுண்டாகிறது" என்று முயற்சியினால் காரிய சித்தி யுண்டாமென்பதையும், விளக்கி முயற்சியின் சிறப்பை வற்புறுத்தியிருக்கின்றார். ஸ்ரீராமபிரானுக்கு வசிஷ்டர் செய்த உபதேசமாகிய ஞானவாசிட்டத்தில்

முயற்சியின் சிறப்பு மூன்று அதிகாரங்களுக்கு மேல் சொல்லப்பட் டிருக்கின்றது. தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் "முயற்சி நன்மையான காரியங்களை யுண்டு பண்ணும்; சோம்பல் தரித்திரத்தை யுண்டுபண்ணும்; தெய்வத்தாலாகாததும் முயற்சியாலாகும்" என்று திருக்குறளின் 62-ம் அதிகாரத்தில் கூறியிருக்கின்றனர்.

ஒருவன் "எனக்கு அதிர்ஷ்டம் வரவில்லையே" என்று வருத்தப்பட்டால் அஃதவனுக்கு எங்கிருந்து வரும்? முயற்சியில்லாதவனுக்கு அழிவுதான் வரும். மலையடிவாரத்திலே நின்றுகொண்டு, ஆகாயத்தை நோக்கி அண்ணாந்து பார்த்துக்கொண்டு யாதொரு முயற்சியும் செய்யாதிருப்பவன் மலையுச்சியில் போய்ச்சேர்வது எப்படி? ஆதலின், முயற்சி செய்தல் வேண்டும். இரண்டொரு முயற்சி வீணாகவோ, கெடுதியாகவோ முடியினும், திரும்பத்திரும்ப விடாமுயற்சி செய்தல் வேண்டும். குழந்தைகள் சரியாக நடக்கக் கற்றுக்கொள்ளுமுன் எத்தனை முறை தவறி விழுகின்றன? எமர்சன் (Dr. Emerson) சொல்லுகின்றபடி "எந்நேரமும் வேலை செய்யுங்கள்; சம்பளத் தோடேயோ, அஃதில்லாமலேயோ நீங்கள் வேலை மாத்திரம் செய்யுங்கள்; உங்களுக்குத் தப்பாமல் வெகுமதி கிடைக்கும். நீங்கள் செய்யும் வேலை (தாழ்ந்ததோ, உயர்ந்ததோ) நடவு நடுவதாயினும், காவியங்கள் எழுதுவதாயினும், பின் எதுவாயிருந்தபோதிலும் அவ்வேலையின் தன்மையைக் கவனிக்கவேண்டாம். அவ்வேலை கண்ணியமானதாயும், உங்களுக்குச் சம்மதமானதாயு மிருந்தால் போதும். * * * எத்தனை முறை தோற்பினும் முடிவில் உங்களுக்கு வெற்றியுண்டு" என்ப துண்மையே.

# 2—வது இரகசியம்.

## தன்னயமின்மை.

“ தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.”

*(இதன் பொருள்:—தகுதியுடையார்க்காயின் தாம் முயற்சிசெய்து சம்பாதித்த பொருளனைத்தும் பிறர்க்கு உபகாரம் செய் தற் பயனுடையனவாம்.)*

இப்பொழுது எப்படி வேலைசெய்கிறது என்னும் கேள்வியுண்டாகிறது. ஏன்? யாவரும் யாம் பெரியவராய் விட வேண்டுமென்றே நினைக்கின்றனர். அவர்கள் அப் படி யேனுவதில்லை? சில சமயங்களில் நாம் வேலைசெய்ய விரும்பும்போது அதனைச் செய்யமுடியாமலிருந்து விடு கிறோம்; சில சமயங்களில் விரும்பாமலே அதிகச் சுறு சுறுப்பாய் வேலை செய்கிறோம். நம்மை ஒரு வேளை சோம்பலாகவும் மற்றொரு வேளை சுறுசுறுப்பாகவு மிருக்கச் செய்வது யாது? சிலர் ஒவ்வொருசமயம் காலையி லெழுந்ததும் அதிக சந்தோஷத்துடன் உற்சாகமா யிருக்கின்றனர். அவர்கள் அச்சமயத்தில் வேலைதொடங் கின், அதிசயாச்சரியமாக, சுறுசுறுப்புடன் அருமையான வேலைகளைச்செய்து முடிக்கிறார்கள். இவற்றிற்குக் காரணமாக ஏதோ ஒன்று இருத்தல் வேண்டும். அஃ தியாது? அதுதான் உயர் வேதாந்திகளாலும் மெச்சப் பட்டு, காரியசித்தியின் இரண்டாவது இரகசியமாய் “நான் செய்கிறேன்” என்னு மெண்ணமின்றித் தன் னயங் கடந்து நிற்கும் ஒரு நிலையாம். “நான்

செய்கிறேன்" என்னு மெண்ண மில்லாமல் வேலை செய்கிறவனுக்குச் சிரமம் தோன்றுவதில்லை; களைப்பு முண்டாவதில்லை. ஒரு மாதத்திற் றான் செய்ய வேண்டிய வேலையை ஒருவன் நினைத்துப் பார்த்தால் அவனுக்கு அப்போதே ஒருவிதக் களைப்பும் வெறுப்புமே யாகிதொரு வேலையும் செய்யாம லிருப்பினு முண்டாகும். தன்னய முடைமை ஒருவனை "எனக்கு எது இலாபம் தரும்" என்று யோசித்துக் கொண்டே சோம்பலாயிருக்கும்படி செய்துவிடும். இதில் இலாப மில்லை. தன்னயமின்மையே சுறுசுறுப்பை யுண்டாக்கும். தன்னயமின்றிய இந்நிலையை ஒருவன் அடைந்த பொழுதுதான் அவனுக்கு அசாத்தியமான காரியங்களெல்லாம் சாத்தியமாய் விடுகின்றன.

அகபர் சக்கிரவர்த்தியினிடத்து இரண்டு இந்திய வாலிப வீரர்கள் வந்து, யாங்கள் வீரர்களென்றும், சக்கிரவர்த்தியினிடத்துச் சேவை செய்ய விரும்புகிறோ மென்றும் தெரிவித்தார்கள். அக்பர் அவர்களுடைய வீரத்தனத்தைக் காட்டுமாறு கேட்டுக் கொண்டார். உடனே அவ்விரண்டு சகோதரர்களும் புன்னகையுடன் ஈட்டியை நீட்டித் தாட்டியாய் விளையாடினர்; அதனால், அவர்கள் உடம்புகள் இரத்தம் சொரிந்தன; ஆயினும், அவர்களது கைகள் நடுங்கவில்லை. அவர்கள் அமைதியுடன் முன்னும் பின்னும் இடசாரி வலசாரியாக வந்து யுத்தம் செய்தனர். ஆ! அவ்விருவரும் தங்கள் மார்பில் தைத்த ஈட்டிகளுடன் தரையில் வீழ்ந்து வீரசுவர்க்க மடைந்தனர். இந்தியசயமே! அவர்களவ்வளவாயும் தன்னயத்தை விடாதிருந்தால், தாங்கள் வீரர்களென்பதை நிரூபித்தல் முடி

யுமோ? நாகரிகம் மிக்க இக்காலத்து நீங்கள் அவ்விதமாக அவ்வாலிபர்கள் தமது வீரச் செயலைக் காண்பித்தது சரியன்று என்று நினைக்கலாம். ஆனால், இக்கதையில் நாம் கற்றுக் கொள்ளவேண்டிய ஒரு நீதியுள்ளது. அஃது தியாகிகளின் கூற்றும்:—"தன்னை மறந்து தான் தொடங்கும் வேலையின்மயமாய் ஒருவன் நின்றபொழுது தான் அவனுக்கு அவ்வேலையில் ஜயமுண்டாகும்" என்பதேயாம். ஒருவன் தான் மறந்துவிட்ட ஏதாவதொன்றை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டுமாயின், தன்னையும் வெளி விஷயங்களையும் மறந்து அந்த யோசனை மயமாகவேயான பொழுதுதான் அவனுக்கு அம்மறந்த விஷயம் ஞாபகத்துக்கு வரும். மகான்கள் யாவரும் தியானம் (Meditation) முதலியவற்றைப்பழகி மனவொருமையைப் பெற முயல்வது இவ்வவசியத்தை முன்னிட்டேயாம். நீங்கள் உங்கள் வேலையின் மயமாய் அமிழ்ந்திவிடுவீர்களாயின், ஜயம் உங்களுடையதேயாம்.

தன்னயப்பேய் ஒருவனைப் பிடித்துக் கொண்டால் அவன் எல்லாம் எனக்கே வேண்டும்; யான் யார்க்கும் ஒன்றும் கொடேன்" என்பன். இதனாலேயே தான் அவனுக்கு யாதொன்றும் வருகிறதில்லை. இது "இல்லை என்னும் வீட்டில் பல்லியும் சேராது" என்னும் பழமொழியினாலும் விளங்கும். "முன்கை நீண்டால் முழங்கை நீளும்." நம்மை நாம் எவ்வளவாகப் பிறர்க்கு அர்ப்பணம் செய்கிறோமோ அவ்வளவுதான் பிறரும் நமக்குத் தம்மை அர்ப்பணஞ் செய்வர். மகாத்மா காந்தியவர்கள் அசௌக்கியமாக இருந்தபொழுது, இந்தியா முழுவதும் அவருக்காக வருந்திற்றென்றால், இந்தியரின் நன்மை தீமைகளைத் தமதாகப் பாவித்துத்

தம்மை இந்தியரின் நன்மைக்காக அர்ப்பணம் செய்தவர் அவரேயன்றோ? ஒரு வியாபாரி தன்னிடத்துச் சரக்கு வாங்க வருபவர்களின் நன்மையைக் கருதி, நல்ல சரக்குகளைக் கொண்டுவந்து வைத்து, அதிக இலாபத்திற்கு ஆசைப்படாமல் வியாபாரம் செய்தாலன்றி அவனிடத்து யாவர்தாம் சரக்கு வாங்கச் செல்வார்? ஒரு யஜமானன் தனது வேலையாளின் குடும்பத்தைத் தனது குடும்பமாகப் பார்த்தால், வேலைக்காரனும் எஜமானனது வேலையைத் தனது வேலையாகப் பாவிப்பன் என்பதி லென்ன தடை?

எல்லாரும் வெண்மையான வஸ்துக்களை விரும்புகிறார்கள்; கருமையான வஸ்துக்களை வெறுக்கிறார்கள். ஏன்? வர்ண தத்துவ மறிந்தவர்கள் சொல்லுகிறபடி வெண்மையான வஸ்துக்கள் வெண்மையானவை யல்ல; கருமையும் கருமையல்ல; சிவப்பும் சிவப்பல்ல. ஒரு ரோஜாப் புஷ்பம் ஏன் சிவந்த நிறமாய்க் காணப்படுகிறது? அந்த ரோஜாவானது சூரிய வெளிச்சத்திலிருந்து எல்லா வர்ணங்களையும் கிரகித்துக் கொண்டு செம்மை வர்ணத்தை மாத்திரம் வெளிவிடுகிறது; எந்த வர்ணத்தை வெளிவிடுகிறதோ அந்த வர்ணத்தால்தான் அது பிரகாசிக்கிறது. கருமை நிறமுடைய வஸ்துக்களோ எல்லா நிறத்தையும் தம்முள்ளே யடக்கிக் கொண்டு யாதொன்றையும் வெளிவிடாமையால் கருமையாகத் தோன்றிப் பலரும் வெறுக்கத் தக்கனவா யிருக்கின்றன. தான் பெறுவதைக் கொடுக்க மறுப்பவனும் அப்படித்தான் கருப்பு வஸ்துக்களி லொன்றாய் எல்லாராலும் வெறுக்கத் தக்கவனாவன். இனி வெண்மையான வஸ்துக்களோ, தாம கிரகிக்கும் எல்லா வர்ணங்களையும் தம்

விடத்து வைத்துக் கொள்ளாமல் வெளியிடுகின்றன. நீங்கள் காரியசித்தி யுள்ளவர்களாக வேண்டின், நீங்கள் பெறுவனவற்றை எல்லாம் திருப்பிக் கொடுங்கள். கொடுப்பதுதான் பெறுவதற்கு வழி. பிறந்த பொழுது கொண்டு வந்ததில்லை; இறக்கும் பொழுதும் கொண்டு போவதில்லையாயின், நடுவிலே வரும் இச்செல்வம் ஈசனருளிய தென்றறிந்து பிறர்க்குக் கொடுக்காமலிருக்கும் உலோபிகள் தாம் இறந்தபிறகு என்ன பலன் காண்பர். "எனக்கே வேண்டும்" என்பதை விட்டுவிடுபவனுக்கு இவ்வுலக முழுவதும் சொந்தம்.

ஒரு விதை மரமாகி விருத்தியடைய வேண்டின், அது தன்னுடைய அழிவிற்கு உடன்பட வேண்டும். பண்டிதர் யாவரும் "நம்முடைய கல்வியைப் பிறர்க்குக் கற்றுக் கொடுக்குந்தோறும் நம்மறிவு வளர்கின்றது" என்பதை ஒப்புக்கொள்ளுகின்றனர். ஒரு சிறு குட்டை "என் தண்ணீரெல்லாம் என்னிடமே யிருத்தல் வேண்டும்" என்று முயல்கின்றது; ஆயினும், அது வெயிற் காலத்தில் உலர்ந்து விடுகிறது. ஒருநதி "தோல்வியோ வெற்றியோ வருக, நான் வேலை செய்யவேண்டும்; என் வாழ்நாள் சுகப்பட வேண்டின் நான் அதி சுறுசுறுப்பாயிருக்க வேண்டும்; ஆதலின் நான் வேலைசெய்கிறேன்" என்று லக்ஷக்கணக்கான மரக்கால் தண்ணீரை எப்போதும் சமுத்திரத்தில கொட்டிக்கொண்டிருக்கிறது. சமுத்திரத்திற்சென்ற அத்தண்ணீர் மேகமாகப் பரிணமித்து, மலையில் வருஷித்துத் திரும்பவும் அந்த நதியிலேயே வந்து சேர்கின்றது. "கொடுத்துக் கெட்டாருமில்லை; கொடுக்காமல் வாழ்ந்தாருமில்லை" ஆகலின், நீங்கள் வேலைசெய்யுங்கள்; அதனுடைய முடிவைப்பற்றி நினைக்

காதீர்கள். "பற்றின்றி வேலையைச் செய்தல்வேண்டும்" என்பது கீதையினுபதேசமாம். ஜனங்களிடத்திருந்து எதையுமெதிர் பார்க்க வேண்டாம். உங்களுடைய வேலை புகழப்படுகிறதா? இகழப்படுகிறதா? என்பதை நீங்கள் கவனியாதேயுங்கள். உங்கள் வேலைகளெல்லாம் நியாய விரோத மில்லாமலும் நன்மை பயப்பனவாயு மிருக்கட்டும்.

வேலை செய்பவன் மனத்தில் கெட்ட எண்ணங்களுதிப்பதில்லை. அவன் எதனையும் கண்டு மயங்குவதில்லை. வேலை செய்துகொண்டே யிருப்பவனுக்கு அதனால் அதிக சுகமுண்டு. சாதாரணமாகப் பகலில் தூங்குவது கெட்ட வழக்கம். சில உத்தியோகஸ்தர்கள் ஞாயிற்றுக் கிழமை முதலிய விடுமுறை நாட்களில் வேறு வேலையின்மையால் பகலில் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் தூங்கி எழுந்து தங்கள்முகம் வீங்கியிருத்தலையும் தலை பளுவாயிருத்தலையுங் கண்டு, விடுமுறை நாளைக் காட்டிலும் வேலைசெய்யும் நாளே சுகமானது என்றபிப்பிராயப் படுகின்றனரெனின், அவ்வேலையின் பெருமை என்னே! ஒருவேலையில் அதிகப்பொறுப்பு(responsibility)இருப்பதாக நினைத்துக் கொள்வதும் கூடாது; சன்மானத்தை விரும்புவதும்கூடாது. பொறுப்புகள் அதிகமாயிருக்கின்றனவென்று நினைப்பின்,அது பயத்தை யுண்டுபண்ணும். இச்சை இருக்குமாயின், இராத் தூக்கமும் வாராது. ஆகையால், நீங்கள் இவ்விரண்டையும் உதறிவிட்டு வேலை செய்யுங்கள். விளக்கு இருந்தால் அதைச் சுற்றிலும் விட்டில்கள் தாமே வந்துகூடும். வெல்லத்தை வைத்தால் ஈயைக் கூப்பிட வேண்டுவதில்லை. பூரணச்சந்திரன் உதயமானால், சுகத்தை யனுபவிக்க ஜனங்கள்

தாங்களே வெளிவருகிறார்கள். நீங்கள் பாத்திரர்களாயிருந்து வேலை செய்தால் உங்களுக்கு வருவது தானே வரும். வேலை, வேலை யென்று எந்நேரமும் வேலை செய்யுங்கள்.

தன்னயமின்மை என்றால் சந்நியாசம் அஃதாவது எல்லாவற்றையும் விட்டுவிடுதல் என்று நினைத்து மருளாதீர்கள். உலோபமே—தனக்கும் பிறர்க்கும் உபயோகமாகாவாறு எதையாவது "எனக்கே வேண்டும்" என இறுகப்பிடித்தலே—இவ்விடத்துத்தன்னயமென்று சொல்லப்படுகிறது. அவ்வுலோபத்தை விடுதலே தன்னயமின்மையாம். ஒரு சமயம் சர்வ சங்க பரித்தியாகமே நல்லதென்றும், பொருளைச் சேமித்து வைத்தலே நல்லதென்றும் வித்தியாசமான இரண்டு கொள்கைகளையுடைய இருவர் ஓரூர்க்குப் பிரயாணமாகப் போய், சாயங்காலம் இருட்டும் சமயத்தில் ஓர் ஆற்றங்கரையையடைந்தனர். தியாகி "இவ் வுடலைப்பற்றி நமக்கேன் கவலை; படகிற்குப் பணமுமில்லை; இக்கரையிலேயே படுத்துக் கடவுளைப் பூஜித்து இவ்விரவைப் போக்குவோம்" என்றான். மற்றவன் "ஐயையோ! நாய்கள் நம்மைத் தின்றுவிடும்; பாம்பு கடித்துவிடும்; குளிர் கொன்றுவிடும்; படகிற்குப் பணமென்னிடமிருக்கிறது; அக்கரைபோய் ஒரு கிராமத்தில் தங்குவோம்" என்று கூறினன். இருவரும் படகிலேறி அக்கரை சேர்ந்தனர். அன்றிரவு பணக்காரன் "பணத்தின் பிரயோஜனம் தெரிந்ததா? நான் பணம்வைத் திருந்தமையால் இருவரும் பிழைத்தோம்; நானும் உன்னைப்போலிருந்தால் ஆற்றின் அக்கரையில் உயிர்விட்டிருக்க நமக்கு நேரிட்டிருக்கும்" என்றான். தியாகி "நீ பணத்தை

வைத்துக்கொண் டிருந்ததனால் நாம் இங்கு வரவில்லை; பணத்தைப் படவுக்காரனுக்குக் கொடுத்ததினாற்றான்—தியாகம் செய்ததினாற்றான்—இங்கு வந்தோம். பணம் சம்பாதிப்பதும் கொடுப்பதற்கே. மேலும், என்னிடத்துப் பணமில்லாவிடினும் உன் பணமே என் பணமாக உபயோகப்பட்டது. நான் எப்போதும் கஷ்டப்படுகின்றதில்லை; காலத்தில் எனக்கு வேண்டியது கிடைக்கின்றது'' என்றான்.

மேல் நாட்டார் பணத்தைக் கைத்தொழில், வியாபாரம் முதலியவற்றில் உபயோகித்து அதற்கு கஷ்டம் பாராதுழைத்து மேலும் மேலும் அபிவிருத்தி யடைகின்றனர். இந்துக்களோ பணத்தைப் பெட்டியிலும், சேமநிதியிலும் (Bank), நகைகளிலும், வட்டிக்குக் கொடுப்பதிலும் போட்டு வைத்து நாளுக்குநாள் தாழ்வுகளை யடைகின்றனர். இந்தியர்கள் பட்டங்களுக்கும் பெருமைக்கும் ஆசைப்படாது, தன்னயம் விட்டு, பரித்தியாக புத்தியுடன் உழைக்க முன்வரும் நாளே நமக்கு நன்னாளாம். அன்றே இந்து சமூகம் தலையெடுக்கும். மின்னல்போல் மறையும் இவ்வாழ்வில் உண்டியுடைக்காகவன்றோ ஒருவர் பொருள் தேடுவது? அற்பப் பிரயத்தனத்தினால் வரும் சொற்பத் திரவியம் இதற்குப் போதுமானதா யிருக்க, உலோபகுணத்தால் தன்னயங்கொண்டு தருக்கி நமதான்மலாபத்தை யிழந்து இன்னலுக் காளாவதழகோ? வாசகர்களாகிய சகோதரர்களே! நீங்கள் காரியசித்தியும் மேன்மையுமடைய விரும்பினால், தன்னயம் விட்டு எந்நேரமும் வேலை செய்யுங்கள்; எல்லா நன்மையு மடைவீர்கள்.

# 3—வது இரகசியம்.

## அன்பு.

“ அன்பீனும் ஆர்வமுடைமை ; அது வீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.”

(இதன் பொருள் :—சம்பந்த முடையவரிடத்துச் செய்த அன்பு ஒருவனுக்கு அத்தன்மையால் பிறரிடத்தும் விருப்ப முடைமையைத் தரும் ; அவ்விருப்ப முடைமை இவனுக்குப் பகைவரும் நொதுமலரும் இல்லையாய் யாவரும் நண்பென்று சொல்லப்படுகின்ற அளவிறந்த சிறப்பைத் தரும்.)

“நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை” என்னும் பழமொழியை நீங்கள் அறிந்திருக்கலாம்; அதன் கருத்தை யுற்று நோக்குவீர்களாயின், இவ்வுலகில் ஒருவனுக்கு இன்பம் விளைய வேண்டுமாயின் உலக முற்றுமே இன்பத்தை யனுபவிக்க வேண்டும் என்றும், தன்னைச் சூழ்ந்த விடமெல்லாம் துன்பம் மேலிட்டிருக்கத் தான் ஒருவன் மாத்திரம் இன்பமுற்றிருப்பது யாங்கணும் எவனுக்கு மியலாத காரியமாமென்றும், ஆதலின் ஒருவன் தான் இன்பமுற வேண்டின் தன்னைச் சூழ்ந்துள்ளோர் இன்பத்தையே நாடல் வேண்டுமென்றும், அங்ஙனம் நாடுதல் அச்சூழ்ந்துள்ளோரிடத்து அவன் அன்புடையவனா யிருந்தால்தான் முடியுமென்றும், அன்பிலார்க்கு எந்த நன்மையையும் அடைய வழியில்லை என்றும் நன்குணர்வீர்கள்.

நம்முடைய தேகத்தை எடுத்துக் கொள்வோம்; அதில் ஓர் அவயவமாகிய வலக்கை சுகமாயும் புஷ்டி

யாயு மிருக்க வேண்டுமாயின், தேகம் முற்றும் சுகமா யும் புஷ்டியாயு மிருத்த லவசியமாம். அங்ஙனமின்றி, அவ்வலக்கை: "நான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருள்களை வயிற்றிற் கொண்டுபோய்ச் சேர்ப்பா னேன்? அஃது அவற்றை எல்லா அவயவங்களுக்கும் பகுத்துக் கொடுப்பதுபோலனைக்குங்கொடுப்பானேன்? அது கூடாது. என் சம்பாத்தியமனைத்தும் யானே யனுபவிக்கற்குரியன" என்று சுயநலம் பேசுமானால், அதன் கதி என்னும்? அவ்வலக்கை சுகமாகவும் புஷ்டி யாகவும் வளர முடியுமா? அது முடியவே முடியா தன்றோ? ஆனால், ஒரு வழியுண்டு. சத்தான பதார்த் தங்களை அது தன்னில் குத்திப் புகட்டிக் கொள்ளா லாம்; அல்லது குளவி, தேள் முதலிய விஷ ஜந்துக் களைக்கொண்டு கொட்டும்படி செய்துகொண்டு தான் புஷ் டியாக வளரலாம். ஆனால் அப்புஷ்டி-அவ்வீக்கம்-வியாதி யேயன்றோ? இவ்வுலகமெல்லாம் ஓர் உடம்பாம்; நமது தேகங்கள் அப்பெரிய உடம்பில் ஒவ்வோரவயவங்களே யாம்; ஆதலின், காரிய சித்தியை விரும்பு மொருவன் இவ்வுலகத்திலிருந்து தன்னை வேறாகப் பிரித்துக் கொள்ளுதல் கூடாது. உலகத்திற்குத் துன்பம் வரு மாயின், அது நம் மொவ்வொருவர்க்கும் வந்ததேயாம். நீங்கள் ஓர் ஏழைப் பிள்ளைக்குப் பக்ஷணம் தந்து அவனை அன்புடன் நடத்துவீர்களாயின், அவன் தாய் உங்கள் பிள்ளையைக் கடவுள் முன்னிலையில் மனமார வாழ்த்துவள். "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்." என்பது மிகு பிரசித்த மான பழமொழி யன்றோ? அன்பாகப் பேசுபவரிடத் துப் பலரும் நேச பாவமாக இருக்கின்றனர். வெடு

வெடுப்பான வியாபாரி விருத்தியடைவதில்லை; வியாபாரி என்பானேன்? வெடுவெடுப்பா யிருக்கும் எவரும் விருத்தி யடையார்.

வேட்டையாடக் காட்டிக்குப் போன ஓர் அரசன் வேட்டையாடும் போது தனது பரிவாரங்களினின்றும் தவறி மிக அலுப்புடன் தாகம் மேலிட்டு அக்காட்டிலுள்ள ஒரு தோட்டத்தை யணுகினான்; அவன் அப்போது தனது சொந்த உடை தரித்திலாமையால் தோட்டக்காரன் அவனை அரசனென்றறிந்து உளேவிடச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. அரசன் தனக்குத் தாகம் அதிகமாயிருப்பதால் அருந்துவதற்கு ஏதாவது கொண்டுவர வேண்டுமென்று தோட்டக்காரனைக் கேட்டுக் கொண்டான். அத்தோட்டக்காரன் உள்ளே சென்று அரை நிமிஷத்திற்குள் ஒரு கிண்ணம் நிறைய மாதுளம்பழ விரசத்துடன் திரும்பி வந்து, அதனை அரசனிடத்துத் தந்தனன். அரசன் அதனுல் தாகம் தணியானாகி "இன்னும் தாகமடங்கவில்லை" என, தோட்டக்காரன் உள்ளே போனான். அப்பொழுது அரசன்: "இந்தத் தோட்டம் மிக வளமுள்ளதா யிருக்கின்றது; அரை நிமிஷத்தில் ஒரு பெரிய கிண்ணம் இரசம் கொண்டுவரக்கூடிய இத்தோட்டத்தில் எவ்வளவு இலாபம் உண்டு; இதன்மது அதிகமான தீர்வை போடவேண்டும்" என்று யோசனை செய்யலானான். பிறகு, உள்ளே சென்ற தோட்டக்காரன் ஒருமணி நேரமாகியும் திரும்பிவரவில்லை. அரசன்: "இதென்ன? முன்னே அரைநிமிஷத்தில் ஒரு கிண்ணம் இரசம் கொண்டு வந்தவனுக்கு இப்பொழுது ஒருமணி நேரமாகியும் கிண்ணம் நிரம்பவில்லையோ?"

என்று எண்ணலானான். சிறிது நேரம் பொறுத்துக் கிண்ணம் வந்தது. ஆனால் இரசம் அரைக்கிண்ணம்தான். அரசன் காரணமென்னென வினவ, தோட்டக்காரனாகிய ஞானியார்: "நான் பழரசம் கொண்டுவரும்பொருட்டு முதல்முறை உட்சென்றபொழுது நமதரசருடைய மனத்தில் நல்ல எண்ணங்களிருந்தன; இரண்டாம்முறை சென்றபொழுது அவ்வெண்ணங்கள் மாறுபட்டிருத்தல் வேண்டும். மாதுளம் பழங்கள் இரசத்தைக் கொடுக்கும் தன்மையில் இவ்வளவு சீக்கிரம் மாறுபடுவதற்கு வேறு காரணம் எனக்கு யாதொன்றும் தோன்றவில்லை" என்றார். அரசன் தனக்குள் யோசித்தான். தோட்டக்காரன் சொன்னது முற்றும் சரியாயிருந்தது. ஏனெனின், அரசன் முதல்முதல் அத்தோட்டத்துக்கு வந்த சமயத்தில், மனத்தில் தரும குணமுள்ளவனாய், அங்குள்ளவர்கள் மிக ஏழைகளாயிருப்பார்களென்றும் தான் அவர்களுக்கு உதவிசெய்தல் வேண்டுமென்றும் எண்ணினான்; ஆனால், ஒரு கிண்ணம் மாதுளம்பழ இரசத்தைப் பார்த்தபிறகு அரசனுடைய எண்ணங்கள் மாறிவிட்டன. அதே நிமிஷத்தில் பழங்களின் *குணமும் மாறிவிட்டது. இக்கதை உண்மையாகவேனு மிருத்தல் கூடும், பொய்யாகவேனு மிருத்தல் கூடும்; ஆனால், ஒருவன் உலகத்தில் சர்வப் பிராணிகளிடத்திலும் அன்பாய் நடந்துகொண்டு அவற்றிலும் யான் வேறல்லன் என்னும் பாவனையுடன் இருக்கும் வரையில அவனுக்கு எல்லாம் காற்றும் கடலுங்கூட சாதகமானவையாகவே இருக்கும். ஒருவன் மனத்தில் விரோதமும் கடுமையு மிருக்குமாயின், அவனுக்கு அவனுடைய சிநேகிதரும் தாயுங்கூட விரோதமாகவே யிருப்பர்.

இஃது எவரும் மறக்கக்கூடாத விஷயமாம். இத்தெய்விகச் சட்டத்தை யறிந்து நடவுங்கள். உடலுக் குயிர் போன்று காரிய சித்திக்கு அன்பு இன்றியமையாத தொன்றாம்.

ஒற்றுமையின் நலத்தைப்பற்றியும் அவசியத்தைப் பற்றியும் ஒவ்வொருவரும் வற்புறுத்துகின்றனர். ஆனால், ஒற்றுமை என்பதென்ன? அஃது ஒருவனை ஒட்டுதல்; அபிப்பிராயங்களிலும், செய்கைகளிலும், பேச்சிலும் ஒட்டிக்கொண்டிருத்தல்; பகையிலாத இடத்தில் ஒட்டுத லெப்படியிருக்கும்? அன்பிலாதவிடத்து ஒற்றுமை எங்ஙனம் வரும்? ஆகையால், சகோதரர்களே! நீங்கள் ஒற்றுமைக்காகக் கஷ்டப்படவேண்டாம்; அஃதின்மைக்காக வருந்தவும் வேண்டாம். அன்பாயிருங்கள். உங்களிடம் யார்தாம் ஒத்துநடந்துகொள்ள மாட்டார்? அதிக அன்பைப் பொழிவதனாலேயே தான் இருஷிகளிடத்தில் புலி சிங்கங்கள்கூட ஒற்றுமையாய் நடந்துகொள்ளுகின்றன.

ஒரு பெரிய காட்டில் நான்கு குதிரை பூட்டிய வண்டி பொன்று போகும்போது ஒரு பெரிய ஓநாய்க் கூட்டம் அவ்வண்டியைப் பின் தொடர்ந்தது; வண்டியிலிருந்தவர் ஒரு குதிரையை அவிழ்த்து விட்டுவிட்டனர்; இரண்டு மைல் தூரம் சென்றபின்னர் மீண்டும் ஓநாய்க் கூட்டம்! ஆம், அதற்கு இன்னொரு குதிரை இரையாயிற்று; மூன்றும் முறையும் வந்துவிட்டன ஓநாய்கள்! இப்பொழுது எந்தக் குதிரையை யவிழ்ப்பது? இருக்கும் இரண்டில் ஒன்றை யவிழ்த்தால் வண்டியும் அங்கேயே நின்று விடும். வண்டிநின்றால், எல்லோரும் ஓநாய்க்கிரை

யாக வேண்டியவரேயாவர். ஆனால், அன்பு ! அன்பு ! அந்த வண்டியின் எஜமானன் மிக அன்புடன் நேசித்து நடத்திவந்த ஒரு வேலைக்காரனும் அவ்வண்டியி லிருந்தனன். அவனை இரங்கி விடும்படி கேட்டனரா? பிடித்துத் தள்ளி விட்டனரா? இல்லை, இல்லை. அவன் ஓநாய்கள் வருவதைக் கண்டான்; உடனே அவற்றின்முன் தான் குதித்தான்! எஜமானன் எவ்வளவு அன்பாய் நடந்துகொள்ளாமல் அவனுக்காக வேலைக் காரன் தன்னுயிரைக் கேளாமுன் கொடுத்திருப்பான்? இஃது ஐரோப்பிய சரித்திரக்கதை. இந்திய சரித்திரத் தில் பறவைக்காகத் தமதுடலரிந்தீந்த அன்பரும் உள ரெனின் அச்சரித்திரங்களை நீங்கள் நேரே படித்தல் வேண்டும். இக்காலத்திலும்கூட மகாத்மா காந்தி போன்ற அநேகர் உதாரணங்களாக இந்தியாவிலிருக் கின்றனர். அன்பில்லாவிடின், காரியசித்தி எப்படி யுண்டாம்? உலகம் ஒரு கண்ணாடி. நீங்கள் முறைத்தால் எதிரிலுள்ளவரும் முறைக்கின்றனர். நீங்கள் சிரித் தால் எதிரிலுள்ளவரும் சிரிக்கின்றனர்; காரணமில் லாமலும் கூடச் சிரிப்பர். கடுஞ்சொற்களை யுதறிவிடுங் கள்; கோபத்தை விடுங்கள்; கோபியை அன்பான முகத்துடன் நோக்குங்கள். அவனுடைய கோபம் தணிந்துவிடும். நீங்கள் இருக்கும் இடமெல்லாம் அன்பு இருக்கட்டும். வீட்டிலும், உத்தியோகத்திலும், வியா பாரத்திலும், போர்க்களத்திலும், அன்பே வேண்டும். பாபி, அநியாயக்காரன், மூர்க்கன் என்னும் காரணத் தால்கூட ஒருவனை வெறுத்தல் வேண்டாம். பாபம், அநியாயம், மூர்க்கத்தன மென்பவற்றை வெறுத்து, அவற்றையுடைய மனிதனை அன்புடன் நேசித்து, கூடி

மானால் அவனைத் திருத்த முயலுங்கள். சுற்றிலுமுள்ளவர்கள் உங்களுக்குச் சாதகர்களா யிராவிடின் உங்களுக்குக் காரியசித்தி எப்படியுண்டாம்? சுற்றிலுமுள்ளவர்களைச் சாதகர்களாக ஆக்கி, அவர்களை உங்களிடத்திற்கு இழுக்கும் சக்தி (ஆகர்ஷண சக்தி—Magnetic power) அன்பேயாகும். அன்பை வளருங்கள்! உலகத்தை உங்களிடமிழுங்கள் !! பெரிய பெரிய காரியங்களை எளிதில் செய்துமுடியுங்கள்.

## 4—வது இரகசியம்.

### சந்தோஷம்.

"இன்பம் இடையறா தீண்டும்; அவாவென்னுந்
துன்பத்துட் டுன்பம் கெடின்."

(இதன்பொருள்:—ஆசையென்று சொல்லப்படுகின்ற துன்பங்களுள்ளே மிகுந்த துன்பம் ஒருவனுக்குக் கெடுமாயின், அவன் முத்திபெற்ற விடத்தேயன்றி உடம்போடு கூடி நின்றவிடத்தும் பேரின்பமானது [illegible] நீங்காது.)

காரியசித்தியால் ஒருவனுக்கு உண்டாகக்கூடியது சந்தோஷமாயினும், அக்காரிய சித்தியும் சந்தோஷமுடையவனுக்குத்தான் உண்டாகின்றது. மூலையில் முக்காடிட்டு அழுதுகொண்டிருக்கும் மூதேவிக்கு எக்காலத்திலும் காரியசித்தியும் உண்டாவதில்லை; சந்தோஷமும் உண்டாவதில்லை. சுபாவமாக நாமெல்லோரும் சந்தோஷமுடையவர்களாக இருக்கின்றோம்; சந்தோஷ சொரூபராக இருக்கின்றோம். நடுவில் துக்கம் உண்டாவானேன்? துக்கம் தூக்கத்தினால் உண்டாகின்றது. அஞ்ஞானத்தினால், அறிவின்மையாகிய தூக்கத்தினால்

அஃது உண்டாகின்றது. இவ்வுடம்பை நானென நினைப்பதனாலேயே துக்கம் உண்டாகின்றது. இவ்வுலகம் ஒரு நாடகசாலை; நாமெல்லாம் அச்சாலையில் நடிப்பவர்கள் (நாடகமாடுபவர்கள்); இவ்வுடல் வேஷம். நாடகசாலையில் அரசனும் ஆண்டியும், சந்தோஷப்படுபவனும் துக்கியும், பணக்காரனும் ஏழையும் உண்டு. ஆனால் எல்லாம் வேஷமாத்திரமே யாகலின் மற்றொருவன் அரசனாயிருப்பது கண்டு பொறாமை கொள்ளுவானேன்? தான் ஆண்டியா யிருப்பதால் துக்கிப்பதும் ஏனோ? நீங்கள் உயர்ந்த அந்தஸ்துள்ள சரீரத்தை வேஷமாகக்கொண் டிருந்தாலும், தோட்டிக்கும் தாழ்வாயசரீரத்தை படைத்திருந்தாலும்முறையே அவற்றால் பெருமையாவது சிறுமையாவது உங்கட்கில்லை. உங்களுடைய ஆட்டத்தைச் சரியாக ஆடுங்கள்; நிருபதியாக நீங்களிருந்தால் அந்த வேலையைச் சரியாய்ச் செய்யுங்கள்; தெருப்பெருக்கும் வேலை உங்களதானால் அதனையுஞ் சரியாகச் செய்யுங்கள். இதில் துக்கம் ஏன்? நாடகத்தில் அழுதற்காட்சிகளும் வருகின்றன. அழுகின்றவர்கள் உண்மையாகவே அழுகின்றனரா? சந்திரமதி அழுகின்றாள். ஆனால், சந்திரமதி வேஷத்தைத் தரித்துள்ளவன் தான் அழும்போதே மனதில் என்ன நினைக்கின்றான்? "நான் சந்திரமதி என்னும் பெண்ணல்ல; என் வேஷம் அது; நான் ஆண் மகன்; நான் எந்தக் குழந்தையையும் இழந்துவிட வில்லை; நான் துக்கிக்கவு மில்லை நூறு ரூபாய் வருமானத்திற்காக நான் இப்போது இப்படி நடிக்கின்றேன்" என்னும் ஞாபகம் அவன் மனதிலுண்டு. ஆனால் மாயா நாடகமாகிய இவ்வுலக வியவகாரத்தில் நீங்கள் யாது செய்கின்றீர்கள்? நாடகத்தை

கூடியுங்கள்; மனதில் துக்கம் வேண்டாம்; சற்றே சிந்தனியுங்கள். நீங்கள் யார்? நீங்கள் இவ்வுடலங்களேயோ? இவ்வுடலங்க ளொழிந்தால் நீங்களுமொழிந்து போவீரோ? இல்லை, இல்லை! இவ்வுடல் தரித்துக்கொண்ட ஒரு சட்டை. "ஆன்மா அழியாதது" என்னும் வசனத்தைக் கேட்டிருக்கின்றீர்களா? அழிவுடைய இவ்வுடல் ஆன்மாவாமோ? அல்லவெனின், அழிவிலாத ஆன்மாவன்றோ நீங்கள்? உள்ளே பாருங்கள். உற்பத்தி நாசமில்லாததும், சுக துக்கமில்லாததும், அறிவானந்த வடிவுமான ஆன்மாவன்றோ நீங்கள். அந்த ஆன்மாவுக்கு யாராவது துன்பம் செய்தல் முடியுமா? துன்பம் அதனை யணுகுமா? அணுகாது. இதனை யறியுங்கள்; கைகொட்டுங்கள்; எப்போதும் சந்தோஷியுங்கள். "சந்தோஷமாகவும், சாந்தமாகவும், புத்திப் பிரசன்னமாகவும் இருத்தல்வேண்டு" மென்று சொல்லுகின்றது. அனுசரிப்பதரிதன்றோ? இன்று இதனைப் படித்தீர்கள். நன்றாய்த்தானிருக்கின்றது. இதனை யறிவதும் அதிக கஷ்டமல்ல; கொஞ்சம் அமைதியும் யோசனையும்தான் வேண்டும்.

போனதுபற்றி வருந்தியும், இனி வருவதுபற்றி ஏங்கியும் வீண்காலம் போக்குவோரநேகர். போன காரியத்தைப்பற்றி இப்போது நினைப்பானேன்? நிகழ்காலத்தைச் சரியாக உபயோகப்படுத்திக் கொள்பவனுக்கு எதிர்காலம் திருத்தியதாகவும் சந்தோஷம் கொடுக்கக் கூடியதாகவுமே யிருக்கும். கள்ளிருளில் ஒருவன் வழி நடக்க வேண்டுமாயின், தான் செல்லவேண்டிய இருபது மைல் தூரமும் இருட்டா யிருப்பதுபற்றி அவன் வருந்துவதில்லை; பத்தடியளவு வெளிச்சம் கொடுக்கக்கூடிய ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு, வெளிச்சமா யிருக்

கின்ற பத்தடியளவைக் கடந்து செல்வானாயின், இன்னும் பத்தடியளவுள்ள வழி வெளிச்சமாக்கப்படும். இவ்விதமாக அவன் நடக்கும் இருபது மைல் தூரமும் வெளிச்சமுள்ளதாகவே யாகின்றது. எவ்வளவு தூரம் வெளிச்சமிருக்கின்றதோ அவ்வளவு தூரம் நடந்துசென்றால் மேலும் மேலும் வழி வெளிச்சமாய்க்கொண்டே போகின்றது. கொஞ்சங்கூட இருட்டுக்கிடையாது; ஆகையால், ஏன் நிற்க வேண்டும்? நிகழ்காலத்தை வீணாக்காது வேலை செய்துகொண்டே யிருங்கள்; அதனைச் சந்தோஷத்துடன் செய்யுங்கள். உண்மையான அக்கரையுடன் வேலை செய்பவனுக்குத் தடையே கிடையாது. ஆதலின், நாமேன் சந்தோஷத்தையும் அமைதியையும் கைவிடல் வேண்டும்? நீந்தத் தெரியாதவர் தவறிக் குளத்தில் விழுந்து விட்டால் அமைதியா யிருப்பதனாலேயுங்கூடத் தம்மைக் காத்துக்கொள்ளல் கூடும். தண்ணீரினிடத்திருப்பதைக் காட்டிலும் மனிதனிடத்து பூமிக்கு ஆகர்ஷண சக்தி குறைவாயிருப்பதால் அம்மனிதன் தண்ணீரில் மிதப்பன். ஆனால் சாதாரணமாய் மனிதர்கள் தண்ணீரில் விழுந்ததும் மன அமைதியை இழந்து விடுவதால், மிதக்கவேண்டுமென்று தாம் செய்யும் பிரயத்தனங்களாலேயே அவர்கள் அமிழ்ந்துவிடுகின்றனர். அதுபோலவே, எதிர்காலத்தில் காரியசித்தியை யடைய வேண்டி நாம் கொள்ளும் பதட்டமும் அமைதியின்மையுமே நமது காரியத்தைக் கைகூடி வாராதபடி செய்து விடுகின்றன.

எதிர்காலத்திலுண்டாகப் போகும் நன்மைகளையே கெட்டியாக நம்பிக்கொண்டு காரிய சித்தியை யடைய விரும்பி யலைபவனது கதி தன்னிழலைப் பிடிக்க எண்ணி

ஓடி பதுத்தவனது கதையாம். ஆண்டாண்டுதோறும் ஓடிபதுத்தாலும் ஒருவன் தனது நிழலைப் பிடிக்க லியலாது. அல்லது, அதே மனிதன் தனது நிழலின் பின்னேடுவதொழிந்து, நிழலுக்கு முதுகுகாட்டிச் சூரியனை நோக்கி யோடினால் அந்நிழல் இவன் பின்னே நாய்போலோடிவரும். ஒருவன் ஜயத்தை (காரிய சித்தியை) விரும்பி யலையும் வரை அவனுக்கு அது சித்திப்பதில்லை. ஜயத்தை விரும்பியலைவதும், சந்தர்ப்பங்களை நினைந்து சங்கடப்படுவதும் ஒழிந்து, தனது சக்தியையும் புத்தியையும் தற்காலம் (நிகழ்காலத்தில்) தான் செய்யவேண்டிய காரியங்களில் செலுத்துபவனுக்கு ஜயமுண்டாகும்; காரியசித்தி யவன் காலைச் சுற்றும். ஜயத்தின் பின் நீங்களோட வேண்டாம்; உங்கள் வேலையை நீங்கள் சரியாகச் செய்தால் ஜயம் உங்களைப் பின்தொடரும். நியாயாதிபதி நியாயவாதி (வக்கீல்) களையும், கட்சிக்காரரையும், சேவகரையும் எதிர்பார்ப்பதுமில்லை, கூப்பிடுவதுமில்லை. நியாயாதிபதி வந்து தமதாசனத்தமருவாரானால் எல்லோரும் தாங்களே அவ்விடம் வருகின்றனர். சூரிய சன்னிதானத்தில் உயிர்களெல்லாம் தாமே தொழிற்படுகின்றன. நீங்கள் தேகாத்ம புத்தியொழிந்து உமதாத்மாவையறிந்து அதன் சச்சிதாநந்தத் தன்மையினையுணர்ந்து, எக்காலும் எந்நேரமும் இனிய புன்னகையுடன் விளங்குவீராயின், உமது சன்னிதானத்தில் எக்காரியமும் ஏதுங் குறைவின்றி நன்மையாகவே நடந்து வருமென்பதற்கோ ரையப்பாடு மில்லையாம்.

அநேகர் பொற்பணிகளையும் இரத்தினங்களையும் காதுகளில் மாட்டிக் கொள்கின்றனர். அவற்றைவிட்டுக் கடவுள் நமக்குத் தந்திருக்கும் அணிகலன்களாகிய

நல்லெண்ணம், புன்னகை முதலிய அன்பினாலாம் பணிகளை அகத்திலும் முகத்திலும் மாட்டிக்கொண்டா லெவ்வளவு அழகாயிருக்கும்! அவற்றை மாட்டிக் கொள்வதற்கு நாம் பணம் செலவழிக்க வேண்டியதில்லையே! அவை நமக்குப் பணத்தைச் சம்பாதித்துத் தருமே!! விருப்பு வெறுப்பின்றி விளங்குவோர்க்கு விண்ணுலகோரும் தொண்டு புரிவரன்றோ?

அநேகர் "கடமை"க் கடமைப்பட்டு "நான் இதனை முடிக்கவில்லையே" "அதனை ஆரம்பிக்கவில்லையே" என வருந்துவர். அவர்கள் அடைவது அலைச்சலே; ஓய்வு கிடையாது. "கடமை" என்பது உம்முடைய நன்மைகளையும் மேன்மைகளையும் கெடுத்து விடாதபடி, அதனைப் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்களே உமது எஜமானர்கள். பெரியவர்களையும் சிறியவர்களையும் உண்டாக்கினவர்கள் நீங்களே. உங்களுக்குப் பணம் வேண்டுவது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமாக உங்கள் வேலைகள் உங்கள் எஜமானர்களால் இன்றியமையாதனவாகக் கருதப்படுகின்றன.

"உமது எஜமானர்களிடம் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டாம்" என்று சொல்வதாகத் தப்பபிப்பிராயங் கொள்ளாதீர்கள். 'பணிவு' என்பது உலகத்தார்க்கு இருக்க வேண்டிய உயர்ந்த நற்குணங்களி லொன்று. அக்காரணம் பற்றியே ஔவையார் கொன்றை வேந்தனில் "கீழோராயினுந் தாழவுரை" எனக் கூறிப்போந்தனர். ஈண்டுச் சொல்லப்படுவதெல்லாம் "கடமை, பொறுப்பு, பயம் முதலியவற்றால் நீங்கள் உங்களைச் சஞ்சலப்படுத்திக் கொள்ள வேண்

டாம்; சாந்தமாக, சந்தோஷத்துடனிருந்து உங்களுடைய வேலையைச் செய்யுங்கள்; நீங்கள் உங்களை வேலைக்காரர்களாகவும், கஷ்டமான வேலைகளை நீங்கள் செய்வதாகவும் நினைக்க வேண்டாம்; நீங்கள் உங்களை அரசர்களாகவும், பொழுதுபோக்கும் உற்சாகமும் வேண்டிச் சில விளையாட்டுகளை ஆடுவதாகவும் நினைத்துக் கொள்ளுங்கள். அரசர்களும், மந்திரிகளும், அக்கிராசனாதிபதிகளும் (உங்களைச் சந்தோஷிப்பிக்கிறதற்காக ஏற்பட்ட) உங்களுடைய வேலைக்காரர்களே" என்பது தான்.

## 5—வது இரகசியம்.

### பயமின்மை.

" அச்சமுடையார்க் கரணில்லை: ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு"

இதன் பொருள்:—காட்டரண் மலையரண் முதலியவற்றுள்ளே யிருந்தாலும் மனத்தில் அச்சத்தை யுடையவர்க்கு அவ்வரண்களாற் பயனில்லை; அதுபோல, செல்வமெல்லா முடையவரா யிருந்தாலும் மனத்தில் மறதியை யுடையவர்க்கு அச்செல்வங்களாற் பயனில்லை.)

பயத்தினால் பலனடைந்தோர் இப்பாரினிலொருவருமில்லையாயினும், பலனிழந்தோர் பலராவர். பயங்காளிகள் பலசாலிகளா யிருந்தும் பலஹீனராகின்றனர்; கல்விமான்களா யிருந்தும் திறமையுடன் வியவகரிக்காமையால் மூடரே யாகின்றனர்; பலதொழில் செய்யும் திறம்பெற்றோராயினும் தமது வேலைகளையும் செய்துகொள்ள முடியாத முடவன் அல்லது மொண்டிக்

குச் சமானராகின்றனர். இங்ஙனமாயின், பயமுடையோர் காரியசித்தி யடைவதெங்ஙனம்? அவர்கள் உலகில் மேன்மை யடைவதெங்ஙனம்? பயம் மனிதனுடைய முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பதால், காரியசித்தியை - உலகில் மேன்மை யடைவதை - விரும்பும் ஒவ்வொருவரும் பயமின்மையைச் சம்பாதித்துக் கொள்ளல் அவசியமாமென்பது குன்றின் மேலிட்ட விளக்கென நன்கு விளங்குவதாம்.

மக்களுக்கு இயமனால் மரண வேதனை இறுதிக்கண் ஒருநாளுண்டாவ தன்மையாயினும், பயங்காளிகளுக்குப் பயத்தினால் மரண வேதனை (க்குச் சமானமான வேதனை)கள் பல தினந்தோறு முண்டாகின்றன. பயமுடையோன் அநாவசியகமாகத் தானே கஷ்டங்களுக்குள்ளாகின்றான். சென்னையில் எம்டன் கப்பல் வந்ததைக் கேட்ட ஒரு கோமுட்டிச் செட்டியார் "ஒச்சினடா ஜெர்மனிவாடு (ஜெர்மானியன் வந்துவிட்டானு)" என அலறி விழுந்து விழுந்த அக்கணமே உயிர் துறந்தனரெனின், நோய் முதலிய காரணங்களுள் ஒன்றுமில்லாதிருந்தும், அவருடைய பயமே அவரைக் கொலை செய்ததன்றோ?

பயமின்றிய பார்வையினால் சிங்கங்களைப் பயமுறுத்தி யோட்டிவிடலாம்; பகைவரையும், துஷ்டரையும் அடக்கிவிடலாம். ஒரு பாதிரியார் (பிஷப்-ஹானிங்டன்) வேட்டையில் ஒரு சிங்கக்குட்டியைச் சுட்டு வீழ்த்தியபோது ஆணும் பெண்ணுமாக இரண்டு பெரிய சிங்கங்கள் அவரை நோக்கி உக்கிரத்தோடு வந்தன; அவை வருவதைக் கண்ட அவருடைய வேலை

யான் ஓடிவிட்டான்; ஆனால், அவர் சற்றும் அசையாமல் அச்சிங்கங்களை உற்று நோக்கிக்கொண்டு நின்றார். அதனால், ஓடிவந்த சிங்கங்கள் சிறிது தூரத்திலேயே நின்றுவிட்டன. அவர் ஓடி யிருந்தால் உயிரிழந்திருப்பர். பின்பு இவர் கொஞ்சங்கொஞ்சமாகப் பின்வாங்கவும் அச்சிங்கங்களும் மெல்ல மெல்லத் தமது குட்டி யிருந்த விடம் வந்து உறுமி உறுமித் துக்கம் பாராட்டின. தாம் கட்ட சிங்கக் குட்டியை விட்டுவிட்டுவர மனமில்லாத பாதிரியார் மீண்டும் சிங்கங்களை உற்று நோக்கிக்கொண்டே அக்குட்டி யிருக்குமிடம் செல்ல, பெரிய சிங்கங்கள், இவர் தைரியமான பார்வையுடன் தம்மை நோக்கி வருவதைக் கண்டு பயந்தோடிப் போயின. சிங்கக் குட்டியைப் பாதிரியார் வீடு கொணர்ந்தார்.

நமது சுவாமி இராமதீர்த்தரும் “ தேகம் நானல்ல; மனம் நானல்ல; மெய்மை பொருந்திய திவ்விய ஆன்மா நான்; நெருப்பிற் கென்னை எரித்தல் முடியாது; ஆயுதங்களுக்கு என்னைக் காயப்படுத்தல் முடியாது ” என்பன போன்ற அநுசந்தானத்துடன் ஹிமாலய மலைகளில் உலாவிக்கொண்டிருந்தபோது ஐந்து கரடிகள் அவரைச் சந்தித்தன; அவர் நேரே அவற்றின் கண்களை உற்றுப் பார்த்தார்; அவரை யாதொரு தொந்தரையும் செய்யாமல் அவை ஓடிவிட்டன. வேறு சமயங்களில் அம்மாதிரியே ஒரு ஓநாயும் ஒரு புலியும் அவரைவிட்டோடிவிட்டன என்றும் சொல்லப்படுகின்றது.

கரைக்காய்ச் சுவாமிகள் நால்வருடன் ஒரு மலையடிவாரத்தில் உள்ள குளக்கரையில் படுத்துக்கொண்டிருந்த போது ஒரு கரடியும் ஒரு புலியும் எதிர் கரை

யில் ஒன்றன்பின்னொன்றாக வந்து நீரருந்திச் சிறிதுநேரம் படுத்திருந்து எழுந்து போய்விட்டன.

அவர்கள் மகாத்துமாக்கள்; அவ்வழி நமக்கு வராதோ என்று சந்தேகிக்க வேண்டாம். அச்சக்தி உங்களிடத்தும் உள்ளது; அதுதான் பயமின்மை - தைரியம். நீங்கள் பயப்படாதிருங்கள். உங்களுக்கு யாதொரு தீங்கும் நேரிடாது. "ஓடுகின்றவனைக் கண்டால் துரத்துகின்றவனுக்கு இலாபம்." பயப்படுகின்றவனைக் காக்கைகூட ஏமாற்றும்; நாயும் துரத்தியடிக்கும். நாய்கள் குலைக்கும்போது, பயந்தோடுகின்றவர்களைத்தான் அவை கடிக்கும்; தைரியத்தோடு நிற்பவர்களை எந்தத் துஷ்டநாயும் ஒன்றும் செய்ததில்லை; செய்வதுமில்லை. நாம் பயப்படாதிருந்தால் புலி, சிங்கங்களையும் அடக்கலாம்; [illegible]ப்படியும் செய்யலாம். பூனையைக்கண்ட புறாக்கள் கண்களை மூடிக்கொண்டு அது தம்மைப் பார்க்கவில்லை என நினைத்துக் கொள்ளுகின்றன. பூனை அவற்றை விழுங்கி ஏப்பமிடுகின்றது. நடுங்கிக்கொண்டே ஒருவன் ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்தில் திரவ பதார்த்தத்தை ஊற்றினால் அது சிந்திவிடும். சில சமயம் பாத்திரமும் தவறிக் கீழே விழுந்து உடைந்துவிடும். சுலபமாய்ப் பயமின்றிப் பாத்திரத்தைக் கையிலெடுப்பவர் ஒரு துளிகூடச் சிதறவிடுவதில்லை.

இரண்டு மூன்று மணங்கு நிறையுள்ள மாமிசம் நிறைந்த இவ்வுடலை, சில சமயங்களில் ஒருசிறு பட்டாசு (cracker), ஓரற்ப எலி, ஒரு சருகினுடைய சலசலப்பு, நிழல் என்னுமிவை குலுக்கி (பயத்தினால் நடுங்கும்படி செய்து) விடுவது மிக அதிசயமல்லவா? துன்பத்திற்கே

இருப்பிடமான இவ்வுடலை நானெனக் கருதி யிருப்போர்க்குத் துன்பமல்லாது பின் யாது கிடைக்கும்? அவர்களுக்குப் பயம் எப்படி யொழியும்? பயமின்மை என்பது என்ன? தேகாபிமானம் (தேகம் நானென்னும் புத்தி) யொழிந்த அன்றே பயம் பறந்தோடிப்போம். தேகாபிமானமொழிந்த பிறகு நீங்கள் புலி, சிங்கம், கரடி, பாம்பு, கத்தி, துப்பாக்கி யென்னுமிவை மாத்திரமல்ல; இந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கும், விஷ்ணுவின் சக்கராயுதத்திற்கும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளது திரிசூலத்திற்கும் பயப்பட மாட்டீர்கள். தைரியத்தினால் எமன் வாயிலிருந்து தப்பினவரநேகர்.

ஒரு பஞ்சாபிச் சிப்பாய் ஒருதரம் கப்பலில் பிரயாணம் செய்யும்போது அவனுக்கு ஏதோ ஒருநோய் கண்டது. கப்பல் வைத்தியர்கள் சோதித்து வியாதிகண்ட ஒருவன் பிழைக்க மாட்டானென்று சொல்லி விட்டால், கப்பலதிகாரிகள் அவனைக் கடலி லெறிந்து விடுவர். இவன் பிழைக்கமாட்டானென்று பஞ்சாபிக்குச் சாவுதீர்ப்புச் சொல்லப்பட்டது. அவன் இதனை யறிந்ததும் அளவு கடந்த சக்தியுடனெழுந்து, சிறிதும் பயமின்றி, நேரே அவ்வைத்தியரிருக்குமிடம் சென்று, வைத்தியர்க்கு நேரே தனது கைத்துப்பாக்கியை நீட்டிநின்று, "நான் அசௌக்கியமா யிருக்கின்றேனா? நீர் அப்படிச் சொல்லுகின்றீரா? நான் உம்மைச் சுட்டுவிடுகின்றேன்" என்றான். வைத்தியர் உடனே அவன் சுகமாயிருக்கின்றானென்று பத்திரம் (certificate) எழுதிக் கொடுத்துவிட்டனர். பயம் பலஹீனம். தைரியத்தினால் இல்லாத பலமும் வரும்.

துன்பத்திற்குப் பயப்படுவதைவிட உயர்ந்த துன்பமொன்றுமில்லை. சாவுக்காகப் பயப்படுவதைக் காட்டிலும் ஆயிரம்முறை சாவது சுலபமான காரியம். "அகமே புறம்" என்னும் ஒரு பழமொழி யுண்டு. உங்கள் மனத்தில் அன்பிருக்குமாயின் வெளியிலும் அன்பையே காணலாம்; மனத்தில் பகையிருந்தால் வெளியிலும் பகைதான்; உள்ளே பயமிருந்தால் வெளியிலும் பயந்தான். ஆபத்துக்களும், ஏமாற்றங்களும் வரும் என்று நீங்கள் எண்ணினால் கட்டாயமாக அவை உங்களுக்கு உண்டாகும். நீங்கள் பயப்பட வேண்டாம்; உங்களிடத்தில பரிசுத்தமிருக்குமாயின், உங்களை ஈனத்தன்மை யணுகாது; காவலில்லாத இருட்டு வீட்டிலே தான் திருடர் புகுவர்; விளக்கிருக்கும் வீட்டில புகத்துணிவதில்லை. உங்கள் மனத்தில் உண்மை யென்னும் விளக்குப் பிரகாசித்துக் கொண்டிருந்தால், உங்களைப் பயமென்னும் பிசாசு தொடராது; நீங்கள் மயங்க மாட்டீர்கள். "எங்களுக்கு இலௌகிக (உலக) ஞானம் இல்லையே" என மனவருத்தப் படாதீர்கள். புண்ணியத்தின் முன் பாவமும், (சாத்விக எதிர்ப்பினர் கைக்கொள்ளும்) ஆத்ம சக்தியின் முன் தேகசக்தி, ஆயுத சக்தி முதலியனவும் தமது பலந்துறந்தொழியும். இவ்வண்ணமாயின், தெய்வீகஞானம் (ஆன்மஞானம்) உள்ளவனுக்கு இலௌகிக ஞானம் இருந்தாலென்? இல்லாமற் போனாலென்? "தேகம் நானல்ல" என்றுணர்வீர்களானால், தெய்வத்தன்மை பொருந்திய ஆன்மாவாகிய உங்களை யுணரும் வழியில் நிற்பீர்களானால், நீங்களும் அப்பரைப்போன்று "நாம் ஆர்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம், நரகத்தில் இடர்ப்படோம்,

நடலை (துன்பம்) இல்லோம், ஏமாப்போம் (இறுமாப்பா யிருப்போம்), பிணி அறியோம், பணிவோம் அல்லோம், (எமக்கு) இன்பமே (யொழிய) எந்நாளும் துன்ப மில்லை" எனக்கூறிப் பயமற்று நிற்கக்கூடிய பரமானந்தக் கடலிலாழ வல்லீரானால் உலகத்தில் இலௌகிக விஷயங்களில் - காரியசித்தி உங்களுக்குக் கிடைக்காமற் போகுமோ? ஆகையால், உண்மையை யறிந்து பயத்தை விடுங்கள்; பயன் பெறுவீர்கள்.

## 6—வது இரகசியம்.

## தன்னம்பிக்கை.

வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்:
மற்றைய எல்லாம் பிற."

(இதன் பொருள்:—தொழில் செய்வதிடத்து வலிமை என்று சொல்லப்படுவது அதனை முடித்தற்குரியா னொருவனது மனத்தினது வலிமையேயாம்; அஃதொழிந்தன வெல்லாம் அதற்குவலிமை என்று சொல்லப்படுவன அல்ல.)

தேக சிரமத்தைக் கவனியாமலும், பசிதாகங்களை யுணராமலும், பிறர் செய்யும் தீமைகளைப் பொருட்படுத்தாமலும், கைக்கொண்ட காரியம் செய்து முடித்தற் கருமையா யிருந்தாலும் ஊக்கங் குன்றாமலும், மேற்கொண்ட காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து அக்காரியத்தை முடித்து வெற்றிபெற விரும்புவோர் தங்களுடைய காரியத்தில் தாம் ஜயமடைதற் பொருட்டு முக்கியமாய்க் கைக்கொண்டு நடத்தற்குரியது தன்னம்பிக்கையாம். தன்னம்பிக்கையாவது ஒரு காரியத்தை ஆரம்பிக்கவாவது செய்து முடிக்கவாவது பிறருதவியை

எதிர்பாராமல் தனது சக்தியையே நம்புதலாம், "தன்
கையே தனக்குதவி" என்பது ஒரு தகப்பனும் அவன்
மகனும் தமது வயலண்டைவந்து "நாளைக்கு நமது பந்
துக்களுடன் வந்து இவ்விளைச்சலை அறுவடை செய்
வோம்" என்றதைக்கேட்டு அசட்டையாயிருந்த வானம்
பாடிப்பறவை மறுநாள் அவர்கள் வந்து "பந்துக்கள் வந்
தாலும் சரி, வராவிட்டாலும் சரி, நாமிருவரும் நாளை
இங்குவந்து அறுப்போம்" என்றதைக் கேட்டுத் தனது
கூண்டிலுள்ள குஞ்சுகளை வேறு புலத்திற்கு அழைத்
துச் சென்றதென்னும் கட்டுக்கதையால் விளக்கப்பட்
டிருக்கின்றது. எனினும், இதற்கு நமதனுபவத்திலேயே
அநேக உதாரணங்களகப்படலாம். இன்றைக்காகும்
காரியத்தை "நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்"
என்று விட்டுவைத்தலும், தன்னாலாகும் காரியத்திற்
குப் பிறரை எதிர்பார்த்திருத்தலும் ஒருவனுடைய
விருத்தியைக் கெடுப்பனவாம்.

ஒருகால் இரண்டு சகோதரர் தமது தகப்பனா
ரின ஆஸ்திகளைப் பங்கிட்டுக் கொண்டனர்; ஆனால், சில
வருடங்கள் சென்றபின் அவருள் ஒருவன் ஏழையா
னான்; மற்றவனோ தனது செல்வத்தைப் பெருக்கிப்
பணக்காரனானான். பிறகு விசாரித்ததில் அவருள்
ஒருவன் சில ஆட்களைத் தனது வியவசாய வியாபார
காரியங்களைப் பார்ப்பதற்கு ஏற்படுத்திவிட்டுத் தான்
கஷ்டப்படாமல் இருந்த விடத்திலிருந்துகொண்டு அவர்
களை "இங்குப் போ", "அங்குப் போ" என்று ஏவிவந்
தானென்றும், மற்றவனோ அவனைப் போலவே ஆட்
களை வைத்துக்கொண்டாலும், எல்லா வேலைகளுக்கும்
அவர்களை ஏவிவிட்டுத் தான் சும்மா இராமல், தானும்

உடன்சென்று அவர்களை "இங்கு வா," "அங்கு வா" என்று தன்னுடனழைத்து எந்தவேலையையும் தான் முதவிற்சென்று செய்தானென்றும், அதனாலேயே "போ போ" என்ற முன்னவனுக்கு எல்லாச் செல்வங்களும் போய்விட்டன வென்றும், "வா, வா" என்ற பின்னவனுக்குப் பதின்மடங்கு செல்வம் பெருகிய தென்றும் தெரியவருகின்றன. இந்தியாவில் பல காரியங்களைச் செய்து வரும் ஜனத்தலைவர் பலருள் மகாத்மா காந்தி என்பாரும் ஒருவரே யாவர். அவர் தாம் ஆரம்பித்த காரியத்தை உடனுக்குடன் ஜயத்துடன் முடிக்க வல்லவராயிருப்பது, அவர் தன்னம்பிக்கை யுடையவராய், தாம் தலையிடும் காரியங்களில், தம்மைப் பின்பற்றுவோரை "போ, போ" என்று ஏவாது, அவர் செல்லு முன் தாம் சென்று அவரை "வா, வா" என்றழைத்தலினாலேயேயாம்.

உங்களுக்குச் செல்வம், கீர்த்தி, கல்வி, ஆனந்தம் முதலானவற்றில் எது வேண்டுமாயினும் பிறரை எதிர்பாராமலும், பிறரை நம்பாமலும், உங்களையே நீங்கள் நம்பவேண்டும். அன்பர்களே! உங்களை நீங்களறியுங்கள். "தனக்குத் தான் உதவி செய்து கொள்ளுபவனுக்குத்தான் கடவுளும் உதவி செய்வர்" என்பது சிதையாத சித்தாந்தமாம். உங்களுடைய சக்தியை நீங்கள் நம்பினால் நீங்கள் எதனையும் அடையலாமென்பதில் சந்தேகமில்லை. உங்களுக்கு ஆகாதது ஒன்றுமில்லை. சிங்கம் மிருகராஜன். அது தன்னையே நம்புகின்றது; அதனால்தான், அது தைரியமாயும், வலுவுள்ளதாயும், ஜயமுள்ளதாயு மிருக்கின்றது. தமிழர்களால் "கைம்மலை" என்றும், கிரேக்கர்களால் "தைடமலை" என்றும் அழைக்கப்படும் யானைகள் தமது

பகை மிருகங்களைக் கண்டு எப்போதும் அஞ்சும். அவற்றுள், ஒன்றாவது தன்னையாவது தனது சக்தியை யாவது நம்புவதில்லை. அவை எப்போதும் கூட்டங் கூட்டமாக வசிப்பதே யொழியச் சிங்கத்தைப் போலத் தனியாக வசிப்பதில்லை; தனியாகவும் காணப்படுவ தில்லை. தாம் தூங்கும்போதும் ஒரு யானையைக் காவல் வைத்துவிட்டுத் தூங்கும். அவை தமக்குப் பலமில்லை யென்று தம்மை நினைத்துக் கொண்டால் பலமில்லாத வையாகத்தா னிருத்தல் வேண்டும். ஆனால் சிங்கத் தைக் காட்டிலும் யானை எத்தனை மடங்கு பெரியது! ஒரு யானை தனது சக்தியை யறிந்து வேலை செய்யு மாயின், நூறு சிங்கங்களையும் கிழித்தெறிந்து விட லாம். வலுவுள்ள தந்தங்களையுடைய அவ்யானைகள் தன்னம்பிக்கையும் தைரியமுமின்றி யிருப்பதனாற்றான் நாய் குலைத்தாலும் நடுக்க முறுகின்றன; பாவம்! ஒரு சிங்கத்தினுடைய பார்வையால் ஒரு பெரும் யானைக் கூட்டம் நிலைகுலைவதென்னே?

உபநிஷத்துக்கள் "இவ்வெல்லாம்(காணப்படுகின்ற இவ்வுலகம்) ஆத்மாவே" என்று கூறுகின்றன. ஒவ் வொருவனும் தன் னுலகத்தைத் தானே சிருஷ்டிக் கின்றான். இச்சூரிய சந்திரர்களைத் தினந்தோறும் கிழக்கி லுதயமாம்படி செய்கின்றவர்கள் நீங்களே! இதனை யொருதரம் உணர்ந்தால் அக்நிமிஷமே நீங்கள் பந்த நீங்கினவர்களாவீர்கள். இதனை யொருமுறை யறிந்தால் உங்கள் காரியமெல்லாம் ஜயமாம். அப்பொழுது உங்க ளுக்குச் சிறைச்சாலைகளும் சிங்கார வனங்களாய் உலகமெல்லாம் உலாவு மிடமாம்.

ஒருவன் தனது சுகத்திற்காக வெளி வஸ்துக்களைச் சேகரிப்பதும், வெளி வஸ்துக்களில் தனது சுகமிருக்கின்றதென்று நினைப்பதும் பஞ்சினால் அஸ்திவாரம் போட்டு அதன் மீது கருங்கல் கோட்டை கட்டுவதனையொக்கும். வெளி விஷயங்களில் வரும் சுகம் அற்பச் சுகமாம்; அஃதாவது அழியும் சுகமாம். தன்னம்பிக்கையே ஆனந்தத்திற்கு அஸ்திவாரமாம். நீங்கள் உங்களைக் கெட்டவாரகவாவது தாழ்ந்தவராகவாவது பாபிகளாகவாவது புழுக்களுக்குச் சமானராகவாவது நினைத்துக்கொள்ளல் வேண்டாம். ஆனால், பாவமானதும் தாழ்மையானதும் உமது மனச்சாட்சிக்குத் தெரிந்ததுமான செய்கை உங்களிடத்திருந்தால் அதனை நீக்கிக் கொள்ளுங்கள். நீங்கள் இவ்வுடம்பல்ல; நீங்கள் உள்ளிருக்கும் ஆன்மாவே; சர்வ சக்தியுள்ள கடவுளே என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் ஒரு கடைக்குப்போய் ஒரு பொருளின் விலையைக் கேட்கும்போது, கடைக்காரன் அதன் விலை ஒரு அணா என்று சொன்னால், அவன் சொல்லிய அவ்விலையணாவுக்கு மேல் ஒரு காசுகூட நீங்கள் அதற்குக் கொடுக்கமாட்டீர்கள். இதுவே இப்படியாயின், நீங்கள் உங்களை மதிப்பிடுவதற்கு மேலாகப் பிறர் உங்களை எங்ஙனம் மதிப்பர்? உங்களுக்கு மதிப்புண்டாக்கிக் கொள்பவர் நீங்களே. இங்கு ஒருவன் தற்புகழ்ந்து கொள்ளலாமென்பது கருத்தன்று.

ஒரு ஞானியின் வீட்டிற்கு ஒருவன் போனான். அச்சமயம் அவர் வீட்டிலில்லாமையின் அவன் அங்குள்ள நாற்காலியின்மீது உட்கார்ந்திருந்து அவர் வந்ததும் "ஸ்வாமிகளே! மனிதன் யார்? கடவுள் யார்? என்றும்

விஷயத்தை எனக்குத் தெரிவித்தல் வேண்டும்" என்று கேட்டான். ஞானியார் அதற்கொன்றும் விடை கூறாமல் அக்கேள்வி கேட்டவரைப் பலவாறாகத் தூஷித்து அங்குள்ள தமது வேலைக்காரரை விளித்து "இவரைக் கழுத்தைப் பிடித்துத் தெருவில் கொட்டித் தள்ளுங்கள்" என்று உத்தரவு செய்தார். வந்தவர் கடுங்கோபங்கொண்டு ஞானியாரின் மேல் விழுந்தார். ஞானியார் அந்த காற்காலியை இழுத்து பார்த்துக் கொண்டு "(தன்னைச் சுட்டிக்காட்டி) இதோ கடவுள், (எதிரிலிருந்த அவரைச் சுட்டிக்காட்டி) அதோ மனிதன். நீர் பயப்படாமலும், உமதாதனத்தினின்று மெழாமலும், மனவமைதியை இழக்காமலும், தைரியத்தைக் கைவிடாமலும், இருந்திருப்பீராஞல் நீரும் கடவுளேயாவீர். ஆனல், உமது நடுக்கமும், பயமும், உமது கடவுட் டன்மையில் உமக்கு நம்பிக்கையில்லாமையுமே உம்மை அற்பப் புழுவாக்கி விட்டன" என்றார்.

"எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும் இலங்கு முயி ருடலனைத்தும் ஈசன் கோயில்" என்பதற்கிணங்க உம்முள்ளேயிருக்கும் கடவுளின் எல்லாம்வல்ல சக்தியை நம்பி உமது தேகத்தைத் தொழிலில் ஈடுபடுத்துவீராயின், உமது காரியங்கள் ஜயமடைவனவாம். உண்மையில் திடமான நம்பிக்கையும், சூழ்ந்துள்ளவற்றைப்பற்றிய சரியான ஞானமும், சந்தர்ப்பங்களை யுள்ளவாறறியுமுணர்ச்சியும், இவ்வுலகம் மித்தையானதென்னும் தீர்மானமும் உடையவர்களாக நீங்களிருங்கள். ககோள சாஸ்திர ஆராய்ச்சியின்கண் கிரகங்களையும், அவற்றின் தூரத்தையும் கணக்கிடும்போது இவ்வுலகம்

ஆலம் விதையினும் சிறிதாக அறியப்படுமென்பதையும் அங்ஙனமே ஆன்மாவின் அளவிறந்த சக்தியின் முன் இவ்வுலகம் ஒன்றுமிலதாகவே கருதப்படு மென்பதையும் அறியுங்கள். அறிந்தால், "இந்த உலகமும், இகழ்ச்சியும், புகழ்ச்சியும், இலௌகிக சம்பந்தங்களும், மான அவமானங்களும், மண் பொன்னென்னு மியாவும் பொய்யாம்; பயித்தியக்காரன் பேச்சுமாம்" என்றுணர்வீர்கள். உலகத்தை நம்பினால் உழல்தான். உண்மையை நம்பினால் நன்மைதான். கடவுளை (உண்மையை) நம்பி, நேர்மையை (உலகப் பொருள்களி னிலையாமையைக்) கடைப் பிடிப்பவர்க்குக் கஷ்டமில்லை. தன்னைக் காட்டிலும் உலகத்தைப் பெரிதாக மதிக்கும் தூக்கத்தினின்று மெழுங்கள்! இன்பம், துன்பம், அவற்றிற்குக் காரணமான சம்பந்தா சம்பந்தம் என்னும் மயக்கங்களை யொழியுங்கள். வைத்தியர்கள் நோயாளிகளின் மத்தியில் வேலை செய்வது போன்று, யாதொரு பற்றுமின்றி, சாட்சி மாத்திரமாக நின்று வேலை செய்யுங்கள்; சுவதந்திரர்களாயிருங்கள்.

---

## 7—வது இரகசியம்.

### சுத்தம்.

"புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்."

(இதன் பொருள்:—ஒருவனுக்கு உடம்பு பரிசுத்தமாந் தன்மை நீரினாலே உண்டாகும்; அதுபோல மனம் பரிசுத்தமாந் தன்மை மெய் பேசுதலால் உண்டாகும்.)

சுத்தம் பலவகைப்படும். அது முக்கியமாய்க் காய சுத்தம், வாக்குச்சுத்தம், மனோசுத்தம், ஆன்மசுத்தம் என நான்கு வகைப்படும். காயசுத்தமும் வாக்குச் சுத்தமும் வாய்ப்பழக்கஞ் செய்பவர்க்கே மனோசுத்தம் வாய்ப்பதாம். மனோசுத்தம் ஆன்மசுத்தத்திற்குக் காரணமாம். ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு சுத்தமா யிருக்கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய வாழ்நாள் மேன்மை யடைகின்றது. கூரிய புத்தியுள்ள எவரும் ஒரு மனிதனுடைய நடையுடைபாவனைகளைக் கவனித்து, அவற்றாலேயே அவனுடைய எதிர்கால அந்தஸ்து முதலியவற்றை நிர்ணயித்துச் சொல்லிவிடல் கூடும். மேற்கூறிய சுத்தங்களை யுடையவனாயிருக்க ஒருவன் விரும்பின் தான் சுலபமாக அவ்வாறிருக்கப் பழகிக் கொள்ளலாம். அதற்கு வெளியுதவி வேண்டியதில்லை.

ஒரு ஏழை தனது உடைகளைச் சுத்தமாக வைத்திருக்க விரும்பினால் நான்கு மடி வஸ்திரங்களை வாங்கி வைத்துக்கொண்டு வண்ணானுக்கு அதிகப் பணம் கொடுத்து அடிக்கடி வெளுக்கவேண்டிய அவசியமில்லை. தனக்கிருக்கும் இரண்டு கந்தைகளைத் தினம் துவைத்துக் கட்டினால் அது போதும். இதுபற்றியே "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்னும் பழமொழி வழங்கப்பட்டு வருகின்றது. மேனாட்டு நடையுடைகளால் தற்காலம் இந்திய நாகரிகமான புராதன சுத்தம் நாளுக்குநாள் நாசமடைந்து வருகின்ற இந்நாளிலும் இந்தியாவில் செல்வவந்தர்களில் கூடத் தமதுடுப்புக்களைத் தாமே சுத்தஞ்செய் துபயோகப்படுத்துவோரு முளர். அன்னியனால் வெளுக்கப்பட்ட

துணி ஸ்தூலமாக வெகு சுத்தமானதாயினும் சூக்ஷ்ம
மாக அதில் அநேக அசுத்தங்க ளுண்டென்ப தறிந்
திருந்த முன்னோர் அவ்வசுத்தத்தைத் தமது சங்கற்
பத்தினால் நீக்கி உபயோகப்படுத்தினதுமன்றி கூடிய
வரையில் தமதுடுப்புக்களைத் தாமே சுத்தப்படுத்தியும்,
தமது நெருங்கிய பந்து மித்திரரைக் கொண்டு சுத்
தப்படுத்தியு முபயோகித்து வந்தனர்.

உடல் சுத்தமா யிருக்கவேண்டின் சோப்பு முதலி
யவை வேண்டுமென நினைப்பது தவறு. "கூழானாலும்
குளித்துக் குடி" என்னும் பழமொழியை மறவாது
சுத்தமான தண்ணீரில் நன்றாகத் தேய்த்துக் குளித்
தால் அதுவே போதுமானதாம். சோம்பல், அதி
நித்திரை, மாமிச முதலிய தாமத குண ஆகாரம், முரட்
டுத்தனம் முதலியவற்றை நீக்கி நிற்றலும் தேக சுத்தத்
தின் பாற்படுவதாம்.

இனி, பொய், வஞ்சகச்சொல், கடுஞ்சொல், பய
னில்சொல் என்னுமிவற்றை நீக்கி எப்போதும் இன்
சொற்களால் தமக்கும் பிறர்க்கும் பயன்படுவனவற்
றையே பேசுதல் வாக்குச் சுத்தமாம். பேசுவதற்கு
விஷயமின்மையால் வீண் பேச்சுப்பேசிக் காலங்கழிக்
கும் அநேகர் அக்காலத்தை வேறு வழியிலுபயோகிப்
பாராயின், அவர் அதிகமான நன்மை யடைவது
திண்ணம்.

பயம், கோபம், ஆசை, பிறர் தாழ்வாக நினைப்பர்
என்னுங் காரணத்தால் சரியான காரியத்தைச் செய்ய
நாணுதல் முதலியவற்றை யொழித்து, அன்பு, திருப்தி
தன்னைப்போல் பிறரைக் கருதுதல் முதலியவற்றை

அனுசரித்தல் மனது சுத்தமாம். ஒருவனுடைய உயர்வு தாழ்வுகளும் அவனுக்குண்டாகும் நன்மை தீமைகளும் அவன் நினைக்கும் எண்ணங்களினின்றே யுண்டாகின்றன என்பது "மனம் போல மங்கிலியம்" "கெடுவான் கேடு நினைப்பான்" என்னும் வாக்கியங்களால உறுதிப் படுத்தப் படுவதாம். நீங்கள் கெட்ட நினைவுகளை நினைத்துக் கெட்ட செய்கைகளைச் செய்து தன் னபமே பாராட்டி வருவீர்களானல், அதற்குப் பிரதியாக உங்கள் மனமுடைந்து போகக்கூடிய துக்கத்தையும், வாதனைகளையும், மனக்கலக்கத்தையும் அடைவீர்கள்; துக்கம் உங்களைப் பிடுங்கித் தின்னும். மூடன் தான் இந்திரிய வியாபாரங்களால் (விஷயானுபவங்களால்) சுகமடைகின்றதாக நினைக்கின்றான். ஆனல், கெடுதியான எண்ணங்களாலும் செய்கைகளாலும் ஒருவனுடைய ஜீவாதாரமான சக்தி குறைவுபட அவன் பாழ்படுகின்றானென்பதை அவனறிவதில்லை. சிலர் கெட்ட எண்ணங்களால் கெடுதி விளைவதில்லையென நினைக்கின்றனர். ஒருவனுடைய கெட்ட செய்கைகள் (செய்கை மாத்திரமாக விருந்தால்) இப்பிறவியில் மாத்திரமே துன்பந் தருவனவாம். கெட்ட நினைவுகளோ, அவை சம்ஸ்கார ரூபமாக மனத்தில் தங்குவதால், பின்வரும் பிறவிகளிலும் துன்பந் தருவனவாம். ஆகையால் முன்னர் மனத்தையே சீர்திருத்த முயலல் வேண்டும்.

தன்னயத்தால் இயற்கைக்கு மாருக நடப்பவர் தகுந்த தண்டனையடைவர். நீங்கள் தொழில் செய்யும் போது விருப்பத்துடன் அத்தொழிலிலேயே உங்கள்

கவனத்தைச் செலுத்துங்கள். உங்களுடைய கால்களும் கைகளும் சூடுபறக்க வேலை செய்து கொண்டிருக்கும் போது உங்கள் மனம் குளிர்ந்து பிரசன்னமாய் (collected) இருக்கட்டும். தொல்லைகளைப் பற்றிய நினைவை அறவே யொழித்து மனம் எப்போதும் ஆன்மாவில் பதிந்து அமைதியுடனிருக்கட்டும். உடலிற் புகுந்திருக்கும் உண்மைக் கடவுளாம் மனிதன் உலோகோபகாரியா யிருத்த லவசியம். ஆயினும், நாம் உலோகோபகாரமாகச் சிலவற்றை அல்லது பலவற்றைச் செய்து முடித்தல் வேண்டுமே, முடிக்கவில்லையே என்னும் கவலை உங்கள் மனத்தில் தொந்தரை செய்யலாகாது. உங்களுதவியை நாடும்படியாக உலகம் ஏன் அவ்வளவு தாழ்ந்த ஸ்திதியிலிருக்க வேண்டும்? நீங்கள் ஒரு நிமிஷ நேரம் சகல ஆசைகளையும் நீக்கி நிற்க வல்லவர்களாயின், அதுவே மிகப்பெரிய உலோகோபகாரமாம். மனம் ஆசை நோய்களொழிந்து அமைதியடையட்டும். ஆசையென்னும் பிசாசை அடித்தோட்டுங்கள். நீங்கள் பற்றின்றிப் பல காரியங்களைச் செய்து கொண்டே யிருங்கள். நீங்கள் செய்யும் வேலைகளெல்லாம் தூய்மையானவையாக விருக்கட்டும். வேலை செய்வதற்கு ஒரு காரணம் வேண்டுவதில்லை. குருடர்கள் வேலை தருவதைக் காட்டிலும் அதிக சந்தோஷத்தை வேறு பொருள்கள் தருவதில்லை என்பதை யறிவதில்லை. சந்தோஷ மென்னும் மாது வேலையென்னும் உடை தரித்திருக்கின்றாள். வேலை என்னும் உடையைப் பார்க்கக்கூசும் மனிதன் சந்தோஷமென்னும் பெண்ணைக் கைப்பற்றுவதெங்ஙனம்? ஆசையால் சந்

தோஷத்தை விரும்புபவர் சம்பளம், கூலி முதலிய வற்றைக் கருதாமலே வேலை செய்யட்டும். இதனால், எல்லோரும் எல்லா வேலைகளையும் சம்பளமில்லாமலே செய்ய வேண்டுமென்பது கருத்தன்று. உங்களுக்கு உயர்ந்த இடம் கிடைக்காவிட்டால், கிடைத்திருக் கும் தாழ்ந்த வேலையைச் செய்வதினின்றும் கர்வத்தால் நீங்க வேண்டாம்; உங்கள் கடமையைச் செய்யத் தாம தஞ் செய்யாதீர்கள்.

தாழ்ந்த வேலையைச் செய்ய மறுப்பது தன்மதிப் பன்று. உண்மையான ஆன்மாவான உள்ளேயுள்ள கட வுளை மதிப்பதுதான் தன் மதிப்பு. தேகத்தை மதிப் பது நன்மைக்கு விரோதமானதும் கேட்டைத் தருவது மாம். தேகத்தை மதித்து அதன் உயர்வு தாழ்வுகளைக் கருதுவதொழித்து ஆத்மாவை மதித்து அதன் உயர் வையே யெண்ணி மகிழ்தல் தான் ஆன்மசுத்தி. மேலும் ஆன்மாவில் சுத்தத்தை நீங்களுண்டாக்கப் போவதில்லை. அஃது எப்போதும் சுத்தமாகவே யிருக் கின்றது. பிறர் புகழ்தலையும் கை கொட்டுதலையும் நம்பா தீர்கள். அந்த நம்பிக்கை உங்களை ஏமாற்றிக் கொடு நெறியில் திருப்பிவிடும். சந்தோஷத்துக்கு உறைவிட மான நீங்கள்வெளியில் சந்தோஷத்தைத் தேடி யலைவது பயித்தியக்காரத்தனமாம். வசந்த காலத்தில் தென்றல் வீசிக்கொண்டிருக்கும்போது மாமரத்தில் உட்கார்ந்த குயில் இயல்பாகவே இனிய குரல் காட்டுவதுபோல, உங்கள் மனம் சச்சிதானந்த ஆன்மாவி லமர்ந்திருக்கும் போது பிரயத்தன மின்றியே—இயல்பாகவே—இன்

[illegible]

ஓம் தத் சத்



கிடைக்குமிடம்
அம்பாவிலாச புத்தகசாலை.
கோமளேசுவரன்பேட்டை, சென்னை.

PRINTED AT THE NOBLE PRESS, MADRAS, S. E.

# வரலாறு

சுவாமி இராமதீர்த்தர் என்னும் மகாத்மா இற்றைக்கு ஏறப்பது வருடங்கட்கு முன் இருந்தவர். இவர் ஆங்கிலம் வல்லுநரா யிருந்தமையின் வெளிநாடுகள் பலவற்றிலும் சென்று உபந்நியாசம் பல புரிந்தனர்; அவை ஆங்கிலத்தில் புத்தக ரூபமாக வெளியிடப்பட்டுள்ளன; "காரியசித்தியின் இரகசியம்" என்னும் பெயரால் அமெரிக்காவிலும் ஐப்பானிலும் ஒவ்வோ ருபந்நியாசம் செய்தனர். அவ்விரண்டுபந்நியாசங்களின் சாரத்தைக் கொண்டு நான் இப்புத்தகம் எழுதலானேன். இது "லோகோபகாரி" என்னும் பத்திரிகையில் 9-6-1919 முதல் 11-8-1919 வரையில் வாரம் வாரம் வெளிவந்தது; இப்போது சில திருத்தங்களுடன் வெளியிடப்படுகின்றது. இவ்வேலை செய்தற்குத் தக்கவனாக என்னை யாக்கிய எனது குருநாதர் இலக்கண இலக்கிய வேதாந்த தர்க்க போதகாசிரியர் வித்வான் ஸ்ரீமான் கோமளபுரம் வடிவேலு செட்டியா ரவர்களது பாதகமலங்கள் எப்போதும் என் மனத்தில் விருப்பனவாக. இதை இப்புத்தக ரூபமாகத் தருவதற்குரிய பல முயற்சிகளையும் மேற்கொண்ட பெரியார் ஸ்ரீமான் மங்கலம் - ஷண்முக முதலியா ரவர்களது கருணைக்கு யான் பெரிதும் நன்றிபாராட்டும் கடப்பாடுடையேன். பிழையிருப்பின் உலகம் பொறுக்க.

1—11—23. அன்பன்

ச. கந்தசாமி முதலியார்.

| | | | |
|---|---|---|---|
| திருக்குறள் [redacted]டன் | 8 | 0 | 0 |
| பெருந்திரட்டு குறுந்திரட்டு | 3 | 0 | 0 |
| சர்வதரிசன சங்கிரகம் 16 மத [illegible] | 2 | 8 | 0 |
| கைவல்லியம் வினாவிடை - விசேஷ உரையுடன் | 2 | 8 | 0 |
| வேதாந்த சாஸ்திர ரத்னாவளி | 2 | 0 | 0 |
| கதாசரித்சாகரம் | 1 | 4 | 0 |
| விவேகாநந்தா-ராஜயோகம் | 1 | 0 | 0 |
| ஞானத்திரட்டு 2-பாகமும் | 1 | 0 | 0 |
| சச்சிதானந்தசிவம் | 0 | 14 | 0 |
| மெய்ஞ்ஞானபோதம் | 0 | 12 | 0 |
| விவேகசூடாமணி - மூலம்-பாக்கெட் | 0 | 12 | 0 |
| சிவஞானபோதம்-பதவுரை-விசேஷ உரையுடன் | 0 | 12 | 0 |
| பஞ்சதசப்பிரகரணம்-மூலம் - பாக்கெட் | 0 | 10 | 0 |
| [illegible]தாத்பர்ய நிர்ணயம் | 0 | 8 | 0 |
| தருக்காமிருதமும்-பிரஸ்தானபேதமும் | 0 | 8 | 0 |
| [illegible]வேதியாரின் வெண்பூட்டு | 0 | 6 | 0 |
| ராஜயோகசாதகம் - விசேஷ குறிப்புடன் | 0 | 6 | 0 |
| [illegible] | 0 | 6 | 0 |
| [illegible] | 0 | 3 | 0 |
| [illegible] - பாக்கெட் | 0 | 2 | 6 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| [illegible]திரட்டு | 1 | 0 | 0 | தருக்கபரிபாஷை | 1 | 0 | 0 |
| திருவாசகம்-பாக்கெட் | 0 | 12 | 0 | வேதாந்தசார | 0 | 10 | 0 |
| வேதாந்தபரிபாஷை | 0 | 10 | 0 | சித்தாந்தபிந்து | 0 | 8 | 0 |
| நைஷ்கர்ம்யசித்தி | 0 | 8 | 0 | சுவாராஜ்யசித்தி | 0 | 8 | 0 |
| தேசிங்குராஜன் | 0 | 8 | 0 | பாகவதத்திரட்டு | 0 | 6 | 0 |
| பாட்டியற்கொத்து | 0 | 6 | 0 | வியாசபோதினி | 0 | 6 | 0 |
| அறிவானந்தசித்தி | 0 | 4 | 0 | ராஜயோகபாஷ்யம் | 0 | 4 | 0 |
| வேதாந்தசந்ஞா | 0 | 2 | 0 | பகவத்கீதைபாக்கெட் | 0 | 8 | 0 |
| ஞானதரிசனி | 0 | 10 | 0 | தத்துவதரிசனி | 0 | 10 | 0 |
| தோடகம் | 0 | 4 | 0 | [illegible] | 0 | 2 | 0 |

| | | | |
|---|---|---|---|
| விசாரசாகரம்-ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் மொழிபெயர்ப்பு | 2 | 8 | 0 |
| வேதாந்த சாராமிர்தமும்-அத்துவிதாசமஞ்சரியும் மூலமும் - உரையும் | 0 | 6 | 0 |

# Kundalakesi

BY

NAGAI C. GOPALAKRISHNAN



PUBLISHED BY

THE VIVEKA BODHINI OFFICE

MYLAPORE, MADRAS, S.

ALL RIGHTS RESERVED.

பக்கம் 12

The ... with Illustrations
the sacre... d devotion to all
that is g... ook is distinctly
good.

Th... of peculiar
interest

... igible Tamil.
The ... a foreword
in ... the young of
b...

S. ... M. A., L. T.—
* * Another ... is free from
errors and written in an easy ... is well adapted
for use in schools as a Text-book.

P. A. Subramania Aiyar Esq., Head Master, Hindu High School, Triplicane.—* *. It is written in very good style. * * I have prescribed it as a Text-book.

T. Kanakasundaram Pillai Esq., B. A.—The accounts ... of the heroines appear to be on the whole on modern lines. It is written in good readable Tamil and may be prescribed for non-detailed study.

[illegible]

[illegible]

# குண்டலகேசி

அல்லது

## நற்கொல்லியை முற்கொன்றவள்

ராஜாஸ். கோபாலகிருஷ்ண பிள்ளை

எழுதியது

விவேக போதினி ஆபீஸ்,

மயிலாப்பூர், சென்னை.

பிரசுரம்.

—

காப்பிரைட்] [விலை அணா 5.

PRINTED AT THE
COMMERCIAL PRESS, MADRAS S E

*Copyright by.*— V. KUPPUSWAMI AYYAR
**Proprietor, The "Viveka Bodhini,' Mylapore.**

# முன்னுரை

நாவல்கள் நீதிபோதனை நாவல்கள், துப்பறியும் நாவல்கள், புனைந்துரை நாவல்கள், அபூதாலங்கார நாவல்கள், சரித்திர சம்பந்தமான நாவல்கள் எனப் பலவகைப்படும். அவற்றுள் இந்த நாவல் என்பாற் படுமோவெனின்,—"சரித்திர சம்பந்தமான" (Historical Novel) நாவலின் பாற்படுமென்க. என்னை? பஞ்சகாவியங்கள் என்றும் சங்க இலக்கியங்கள் என்றும் தமிழறிவுடைய சான்றோரால் பாராட்டப்படும் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐந்து பண்டைத்தமிழ் நூல்களுள் ஒன்றனைப்பற்றியது இந்நாவலாகும். இவ்வைந்து காப்பியங்களுள் முன்னைய மூன்றும் புத்தக உருவத்தில் தம் பண்டைச் சொரூபங் குன்றாமல் இன்றும் விளங்கி வருகின்றன பின்னைய இரண்டும், தம்முழு மேனியோடு இதுகாறும் வெளிப்போந்தில. இவ்விரண்டினுள் ஒன்றான குண்டலகேசி என்பதைப்பற்றி இதுவரை கிடைத்துள்ள ஒரு சில ஆதாரங்களை அஸ்திவாரமாகக் கொண்டு, அப்பெயர் புனைந்தே கட்டப்பெறும் இந்த 'நாவல் மாளிகை' தனக்கு வேண்டிய சாதனங்களை, அவசியம் நேர்ந்தவிடத்து, பிறவிடங்களிலிருந்தும் கடனாகப் பெற்றிருக்கிறது. இந்த நாவலின் கதையமைப்பிற்குச் செந்தமிழ்ப் பத்திரிகையின் புதற்றொகுதி மூன்றும் பகுதியும், இந்நாவலின் இரண்டாம் அதிகாரத்தில் வருகின்ற விஷயத்தின் பெரும் பகுதிக்கு, மணிமேகலையில் சேர்க்கப்பட்டுள்ள "பௌத்த தருமமும்" எமக்குப் பெருஞ் சாதனமாயிருந்தன. ஆதலின், செந்தமிழ்ப் பத்திரிகாசிரியர்க்கும், மஹா மஹோபாத்தியாய பிரும்மஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்கட்கும் யாம் பெரிதுங் கடப்பாடுடையேம்.

'குண்டலகேசி' என்னும் இந்நாவல், முதலில் "விவேகபோதினி" என்னும் அரிய மாதாந்தத் தமிழ்ப்

பத்திரிகையிற் பிரசுரமாயிற்று. அப்பத்திரிகையின் அதிபரும், எமது ஆப்த நண்பருமான ஸ்ரீமத் வி. குப்புசாமி ஐயர் அவர்கள், பொது ஜனங்களுடைய நன்மையைக் கருதி, இப்போது இதனைப் புத்தக உருவில் பிரகடனஞ் செய்ய முன் வந்தது பெரிதும் பாராட்டற்பாலது. "குண்டலகேசி" என்னும் இக்காப்பியத்தைப் போலவே "வளையாபதி" முதலிய ஏனைய நான்கு காப்பியங்களையும் சிறு நாவலாக எழுதித் தமிழ் நன்மக்களுக்கு உபகரிக்கக் கருதியிருக்கின்றோம். இன்னோரன்ன எமது முயற்சிகள், தமிழ் நன்மக்களுடைய நன்மதிப்பையும் அபிமானத்தையும் முற்றும் பெற்று, எம்மை மேலும் மேலும் உற்சாகப்படுத்துமென்று யாம் உறுதியாய் நம்புகின்றோம். இந்நாவலை அன்புடன்பிரசுரித்த எமது நண்பர் ஸ்ரீமத் குப்புசாமி ஐயரவர்கட்கும், எம்முடைய நாவல்களை மிகுந்த அன்புடனும் ஆவலுடனும் படித்து மகிழும் பொது ஜனங்களுக்கும், யாம் எமது மனமார்ந்த வந்தனத்தையும் நன்றியறிதலையும் செலுத்துகின்றோம். யாம் மேற்கொள்ளும் இத்தகைய முயற்சிகளை இனிது நிறைவேற்றி வைக்கும் பிறையணி செஞ்சடைக் கறைமிடற்றண்ணலை மனமொழி மெய்களால் முறையே சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றோம்.

நிற்க; இந்நாவலின் இறுதியில், குண்டலகேசி தன் கணவனாகிய காளனை மலையினின்றும் கீழே வீழ்த்திக் கொன்றதாகக் கூறப்பட்டிருப்பது நம் இந்து தேச ஸ்திரீ தருமத்திற்கு ஒத்ததாக இல்லையென்று வாசகர்கள் சிலர் ஆசங்கித்தல் கூடும். ஆனாலும், முதனூலில் அவ்விதம் கூறப்பட்டிருத்தலால், அதனை மாற்றிச் சரித்திர சம்பந்தமான உண்மையைச் சிதைத்தல், முறையன்றெனக் கருதி, முதனூலிற் கூறப்பட்டபடியே யாம் எழுதியிருக்கின்றோம் என்பதை நேயர்கள் ஞாபகத்தில் வைத்தல் வேண்டும்.

நாகை. ஸி. கோபாலகிருஷ்ணன்.

ஓம்

# குண்டலகேசி

அல்லது

# தற்கொல்லியை முற்கொன்றவள்

## முதலாம் அதிகாரம்

### மதிநோக்கும் மதிமுகத்தாள்

“காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கத மென்று இசையால் திசைபோய துண்டே”

—சிந்தாமணி

சீருஞ் சிறப்பும் இனிதியன்றதும், நாமகள் நயந்த கலைய முதல்வியும் பூமகள்பயந்த புனைநீர்ப்பொருளுமாகிய இருபெருஞ் செல்வமும் நன்கமைந்ததும், குடமலையினின்றுதிப்புனல் நங்கை,—றனையாகிய பூமாலையை,—இன்பமிகுந்த தன் காதற் கணாளனும் சமுத்திர ராஜனுக்குச் சூட்டிடுதல் கருதி,—நீர்தார் களிப்பாற் சிறக்க வேந்திக் காற்றினுங் கடுகிக் கீழ்த்திசை நோக்கிச் செல்லும் பேரொலி முழக்கை என்றுங் கொண்டதும், செந்நெல் விளைபிடும் உழவருழத்தியர் காற்றுப்

பதித்து நடிக்கின்ற உவப்பின் மிகுதியால்,—மழை பொழி குறியென முன்னர்த் தோன்றும் இடி முழக்கென்று எழிலுறு மயிலினங்கள் மகிழ்ந்து ஆரவாரிக்கும்படியும், பொழி லுறை குயிலினங்கள் மனமாழ்கித் தத்தம் பொழிலகத்தே ஒடுங்கும்படியும்,—சேர்ந்து பாடும் பாட்டொலி என்றுங் குன்றப்பெறாததும், தன் நீர்மை குன்றாதிருத்தல் வேண்டி முந்நீர்ப் புணரி ஆடையுடுத்த நிலமகட்கு நெற்றித் திலதம் போன்றுளதும், பலவகையான பழங்களைத்தரும் பலவகைப்பட்ட தருக்களையுடைய தோப்புக்களையும், நறுமணங் கமழும் பன்னிறப் பூக்களையுடைய பூஞ்சோலைகளையும் தன்கண் ஒருங்கே பெற்றதும், அந்தணர் வீதியும் அங்காடித் தெருக்களும் நிறையப்பெற்று வேத முழக்கையும் பண்டங்கொள் வாணிபர்களின் வாத முழக்கையும் இடையறாது கொண்ட பெருமை வாய்ந்ததுமான சோழநாட்டிற்குப் பண்டைக்காலத்தில் தலைநகராயிருந்த காவிரிப்பூம்பட்டினம் என்னும் ஒப்புயர்வில்லாத் திப்பிய நகரத்தில், கல்வி, ஒழுக்கம், ஆண்மை, தயாளம் முதலிய உயர் குணங்களிற் சிறந்தவனும், திருமகளின் திருவருள் நிரம்பப் பெற்றுப் பெருந் தனவந்தனாய் விளங்கியவனும், வைசியகுலத்துதித்து அக்குலத்திற்குரிய வேளாண்மைத் தொழிலையும் வாணிபத்தொழிலையு முறைவழாது நடத்திப் பொருந்து முறையிற் பொருளீட்டினவனும், தன்காலத்திருந்த சோழமன்னனோடு நெருங்கிய நட்புரிமைபூண்டு அம்மன்னனால் பாராட்டப் பெற்றவனும், இக்காலத்தில் அரசாங்கத்

தாரால் கொடுக்கப்படும் பட்டங்களைப் போலும் அளிக்கப்படும் பரிசில்களைப்போலும், அக்காலத்தில் தமிழ் அரசர்களால் கொடுக்கப்பட்ட பல பட்டங்களுள்ளும் அளிக்கப்பட்ட பல பரிசில்களுள்ளும் மிகச் சிறந்ததும், சேனைத் தலைவனுக்கே பெரும்பாலும் சூட்டப்படுவதும், ஏனையோர்க்குப் பெரும்பாலும் கிட்டாததுமான "ஏனாதி" என்னும் கௌரவப் பட்டத்தையும், அப்பட்டத்திற்குரிய அடையாளமாகக் கொடுக்கப்படும் "ஏனாதி மோதிரம்" என்னும் கணையாழியையும் சோழ மன்னன் உவந்தளிக்கக் களிப்புடன் ஏற்றுப் பெருஞ்செல்வ பெருமையுடன் துலங்கியவனுமான ஒரு பிரபல வைசியனுக்கு, அவன் முற்பிறப்பிற் செய்த பெருந்தவப் பயனாலும்,

> "ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
> ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
> மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
> மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
> உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"

என்று மணிமேகலைக்கு எடுத்து உபதேசித்த தீவதிலகையின் உபதேச மொழியைத் தனக்குபதேசித்ததாகவே கருதிப் பல வகையான தான தருமங்களை,—இக்காலத்தில் பலர், தாங்கள் செய்யுந் தருமத்தைக் கண்டு பிறர் தங்களைப் புகழ வேண்டும் என்றும், தங்களுடைய பெயர் பத்திரிகைகளில் அழகாக அச்சிடப்படுவதைக் கண்டு மகிழவேண்டுமென்றும், மிக மலிவாக விற்கப்படும் கௌரவப்பட்டங்களை வாங்கவேண்டுமென்றும், தருமம் செய்வதை ஒரு

காரணமாக வைத்துக்கொண்டு யாசகம் செய்தால் அந்த யாசகத்தாற் கிடைக்கின்ற பெரும் முதலை, முதலை விழுங்குவதுபோல், விழுங்கிவிடலா மென்றும் நினைத்தும், இன்னும் இவைபோன்ற பல காரணங்களைத் தங்கள் அந்தரங்க நோக்கமாகக்கொண்டும், உலகத்தை மயக்குவதற்காகச் செய்யும் போலித் தருமங்களைப்போலாது,—உண்மை அன்புடனும் முதிர்ந்த தயாளத்துடனும் இப்பிறவியில் இடையறாது இயற்றிய பலனாலும், அவன் மனம் மகிழும்படியும் அவனுடைய உற்றாரும் உறவினரும் ஆனந்திக்கும்படியும், அவனுடைய மனைவி வயிற்றிற்றோன்றி பத்துத் திங்களுமுற்றமுடிந்தபின் பிறந்த பெண்மகவுக்குச் சாமுத்திரிகா சாஸ்திரப்படி எல்லா எழிலும் பொருந்தியிருந்தமையின், அதனை மிக்க அன்புடனும் ஆர்வத்துடனும் வளர்த்து, உரிய பருவத்தே அதற்கு நாமகரணஞ் சூட்டியும், வித்தியாப்பியாசம் செய்வித்தும் வர, அப்பெண்மகவும் குழவியெனக் கிடந்து, மதலையென மிழற்றி, சிறுமியெனத் தவழ்ந்து, பேதையெனப் பிதற்றி: இங்ஙனமாகவே நாளுக்கு நாள் பிறைமதிபோல் வளர்ந்து, இறுதியில் "மங்கை" என்னும் பெயர் பெறுதற்குரிய பருவத்தை அடைந்து, தன் சேடியர் குழாத்துடன் அந்தப்புரத்தில் வதிவளாயினள்; அந்த மங்கை பெயர்,—குண்டலகேசி!

அவள் ஒரு நாளிரவு முதல் யாமத்தில், சந்திரன் தன் முழுக் கலைகளுடன் ஆகாயத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தபோது, தன் மாளிகையின் மேன்மாடி

யில், குணமாலை, கனகமாலை என்னும் பெயருடைய தன் இரண்டு சேடியர்களோடு, உல்லாசமாய் விளையாடிக்கொண்டும், தன்னுடைய ஆசான் கற்பித்த அரிய நூற்பொருள்களைக் குறித்து வார்த்தையாடிக்கொண்டும், சந்திரனை நோக்கியபடியே பலவாறு மனோபாவனை செய்துகொண்டிருந்தாள்.

"தோழிகாள்! விண்மீதூரும தண்மதியை நோக்கும்போது உங்களுடைய மனோபாவக உணர்ச்சியில் புதிய கருத்துக்கள் எவையேனும் புலப்படுகின்றனவா?" என்று குண்டலகேசி தன் சேடியர்களை நோக்கி வினாவினாள்.

"தலைவியே! எங்களுக்கு மனோபாவக உணர்ச்சி இருந்தாலன்றோ புதிய கருத்துக்கள் தோன்றும்? உன்னைப்போல் நாங்கள் படித்தவர்களல்லோம்" என்று இருவரும் சேர்ந்து விடையிறுத்தார்கள்.

"பாவனைசக்திக்கும் நூலறிவுக்கும் சம்பந்தமே இல்லை. ஆதலால், உங்கள் மனத்தில் தோன்றுவதைக் கூறுங்கள்" என்று குண்டலகேசி மீண்டும் வற்புறுத்தினாள்.

"அம்மையே! உன் திருநுதற்குத் தன்னுடைய மூன்றாம் கலை இணையாகா தென்னும் உண்மையினை அறிந்தே சந்திரன் சாம்பவன் முடியில் சரணடைந்தான் என்று நான் கருதுகிறேன். அன்றியும், பிறை என்னும் பெயர், உன் நன்னுதலின் முன்னிலையில், தனக்கு ஏற்காதெனமதித்தே, மதியென அவன் வளர்கின்றான் என்றும் நான் நினைக்கிறேன்" என்று குணமாலை கூறினாள்.

"நன்று சொன்னாய், குணமாலையே! மதியென அவன் வளர்ந்தது, அவனுடைய மதியின்மையையே புலப்படுத்துகிறது. என்னை? பிறையென விளங்கிய ஞான்று நந்தலைவியின் வாணுதல் அவனுக்கு இகழ்ச்சியை விளைத்ததுபோலவே, மதியென விளங்குகின்ற போது அவளுடைய திருமுகம் அவனுக்கு இகழ்ச்சியை விளைவிக்கும் என்பதை அவன் அறியானாயினானன்றோ?" என்று கனகமாலை கூறினாள்.

"ஆம், நீ உரைத்தது சாலப் பொருத்தமே. முதலில் அவ்வுண்மையை அவன் அறிந்தானில்லன். ஆயினும், தன்னிடம் 'முயல்' என்று சொல்லப்படும் களங்க மிருப்பதால், களங்கமற்ற முகத்தையுடைய நந்தலைவியின் முன்னர்த் தோன்றுதல், தனக்குச் சிறுமையாம் எனப் பின்னர்த் தெளிந்து கருமேகத்தின் இடையே சென்று மறைந்தொளிய அவன் முயல்கின்றான், கண்டாய்!" என்று குணமாலை கூறிச் சந்திரனையுஞ் சுட்டிக் காட்டினாள்.

"சகிகாள்! என்னைப் பலபடப் புகழ்ந்து உரையாடுதற்கோ, நான் உங்களை நோக்கி இவ்வினா நிகழ்த்தினேன்?" என்று குண்டலகேசி புன்முறுவலிலே மறைந்த நாணத்துடன் சொன்னாள்.

"அம்மையே! எங்கள் மனத்தில் தோன்றியவற்றைத்தாமே நாங்கள் சொல்ல முடியும்? எங்கள் உரைமொழி உனக்குப் புகழ்மொழியாய்த் தோன்றினால், நாங்கள் சம்பாஷணையை நிறுத்திக்கொள்ளுகிறோம். சந்திரனை நோக்கும்போது உனக்கு என்ன தோன்றுகிறது? அதைத் தெரிவித்தால் நாங்கள் கேட்கிறோம்"

என்று குணமாலை சொன்னாள். அவளுடன் கனக
மாலையும் இணங்கிப் பேசினாள்.

"பாருங்கள்! வானுலாவும் இவ்வெண்மதியை
நோக்கும்போது எனக்கு ஓர் எண்ணம் உண்டாகி
றது. நீங்கள் இருவரும், என்னுடைய நிலைமையைக்
காட்டிலும் அவனுடைய நிலைமை மிகத் தாழ்ந்தது
என்று பொருள்படும்படி உரையாடினீர்கள். ஆனால்,
எனக்கு அவ்விதம் தோன்றவில்லை. அவனுடைய
நிலைமையைவிட என்னுடைய நிலைமையே தாழ்ந்தா
யும் பரிதபிக்கத் தக்கதாயு மிருக்கிறது" என்று குண்
டலகேசி சொல்லிக்கொண்டிருக்கும்போதே, "தலை
வியே! நீ அவ்விதம் நினைத்ததற்குக் காரணம் யாது?"
என்று குணமாலை இடைமறித்து உசாவினாள்.

"காரணம் யாதா? இராகு என்னும் கோளினால்
பிடிக்கப்பட்ட சந்திரனைத் திருமால் விடுவித்து இரட்
சித்தார். அவரால் விடுதலையடைந்த அவன், மீதூர்
களிப்பினால் இப்போது வெளிமீ தூர்கின்றான். ஆனால்,
நானோ, உருவிலியான மதன் என்பவனாற் பிடிக்கப்
பட்டு மிக வருந்துகின்றேன். என்னை அவன் கையி
னின்றும் விடுவிப்பார் எவரும் இலர். இதனால் யாரு
டைய நிலைமை பாராட்டத் தக்கது, யாருடைய
நிலைமை பரிதபிக்கத் தக்கது என்பதை நீங்களே அறி
ந்து கொள்ளலாம். மேலும், தான் விடுதலை அடைந்த
பெருமைக் குறிப்பும், நான் விடுதலை அடையாத சிறு
மைக் குறிப்பும் இனிது தோன்ற என்னை நோக்கி எள
னஞ்செய்து நகைப்பதுபோல், சந்திரனுடைய தோற்

றம் இருப்பதும் இவ்வுண்மையை வலியுறுத்தும்" என்று குண்டலகேசி உரைத்தாள்.

"இவ்விதம் நீ கருதுவது, உன்னுடைய குற்ற மன்று; உன் பருவத்தின் குற்றமாகும். தலைவியே, உன்னுடைய பெருங் குறையை நிவர்த்திக்க வேண்டு வது உன் பெற்றோரின் கடமையாகும். இன்னமும் உனக்கு விவாகம் செய்விக்காமல் உன் பிதா இருந்து வருவதற்குக் காரணம் யாதென எனக்கு விளங்கவில்லை. உன்னுடைய சிறந்த அழகுக்கேற்ற கணவன் கிடைக்க வில்லை போலும்!" என்று குணமாலை கூறினாள்.

குணமாலை கூறியது வெறும் புகழ்மொழியன்று; உண்மையேயாம். ஏனெனில், குண்டலகேசி என்பாள் இயற்கையிலேயே பேரழகும் பெருநலமும் இனிது வாய்ந்தவளாவாள். அவளுடைய "பச்சென்ற திரு முகமும், சேயிதழும், வெண்ணகையும், பார்வை என் னும் நச்சம்பும், அமுதூற நவிற்றுகின்ற மட மொழியும், நாணும் பூணும், நுண்ணிடையும் கண்டு சோர்ந்து" முற்றத் துறந்த மாதவ யோகிகளும் நிலை குலைவார்கள் என்றால், அவள் பேரெழிலைச் சில மொழி யால் புகழ்வது யாங்ஙனம்? காரிருளைக் காத்தாற்பிடி த்து நீளமுறுக்கினாற்போல் கருமையும் மென்மையும் அடர்த்தியும் நீளமும் ஒருங்கமைந்த கருங்குழலாள்! வட்டமதியின்மேல் மற்றோர் இளம்பிறையைப் பொருந்த வைத்ததுபோல் காணப்படும் அழகிய திருமுகமும் குறுகி வளைந்த சிறுநுதலும் ஒருங்கமைந்த பேரெழி லாள்! பாற்கடலிற் பள்ளிகொண்ட கருமேனித் திரு மாலை நெஞ்சகத்தே நினைப்பூட்டும் பெருவிழியும் கண்

மணியும் ஒருங்கமைந்த தடங்கண்ணாள்! எள்ளை எள்ளும் எழில் மிகு நாசியாள்! வள்ளையைப் பழிக்கும் சித்திரச் செவியாள்! சங்கம் புரையும் பங்கயில் மிடற்றாள்! மூங்கில் நிகர்த்த பஞ்சிளந் தோளாள்! பனிங்கெனத் துளங்கும் ஒளிமிகு கதுப்பும், கோவ்வையை நிகர்த்துக் கிள்ளையை மயக்கும் செவ்விய இதழும், முல்லை முகைச் சர மென்று ஐயுறத்தக்கதாய் முறுவலொளிவீசும் பல்வரிசையும், மதியை நிகர்த்த அவள் மதிமுகத்திற்கு, மதிக்குள களங்கம் இன்றென வற்புறுத்துவபோல் விளங்கின! பல் வளை அணிந்த முன்கையும், காந்தள் நிகர்த்த அங்கையும், "துடியும் பிடியும். வல்லிக் கொடியும் இணைபாகா; வானிற் றோன்றும் மின்னே இணை" என்று சொல்லும்படியான நுண்ணிடையும், கதலித் தண்டையும் மதகரியின் துதிக்கைத் துண்டையும் புறங்காணவல்ல தொடையும், வராலை நிகர்த்த கணைக்காலும், பாளை விரிபாப் பசுங்குரும்பையைப் பழித்துச் சிலம்புந் தண்டையும் சிலம்பும்படி அணிந்து, ஆடவர் கருத்தை இழுக்கும் பாதம், "அனிச்சமும் அன்னத்தின் தூவியும் நெருஞ்சிப் பழம்" என்று சொல்லும்படியாக, அவ்வளவு மென்மையொடு விளங்கிய சீறடியும் இனிதமைந்த, இம்மங்கை நல்லாளின் சாயல் மடமயிலையும், மேனி பத்தரை மாற்றுப்பசும்பொன்னையும், குரல்குயிலொலியையும், மொழி அமிழ்தையும் ஒத்திருந்தன வென்றால், குணமாலை இவளழகைப் புகழ்ந்து மொழிந்தது வழுவாமோ?

"குணமாலையே! காதலனும் காதலியும் ஒருங்

இருந்தால் அவர்கட்கு இன்பத்தைப் பயப்பதும், பிரிந்திருக்கும் காதலர்களுக்கும், விவாகமாகாத பருவவதிகளுக்கும் துன்பத்தை விளைப்பதும் சந்திரனுடைய இயல்பான குணமாகும். நமதிலே பிறந்த இந்த மதியை நாம் மதித்தல் வேண்டாம். நம் தலைவியை அழைத்துக்கொண்டு அந்தப்புரம் செல்வோம்" என்று கனகமாலை கூறினாள்.

"தோழிகளே! இதற்குள் அந்தப்புரம் செல்லுவானேன்? இன்னும் சில நாழிகை இங்கு விளையாடுவோம். இதோ. தோழி பத்மினி வருகின்றாள். அவளையும் சேர்த்துக் கொள்வோம்" என்று குண்டலகேசி சொல்லிக்கொண் டிருக்கும்போதே பத்மினி என்னும் மற்றொரு தோழியும் அங்கே வந்து சேர்ந்தாள். நால்வரும் சேர்ந்து "நான்மூலை பாய்தல்" "கண்பொத்துதல்" "அம்மனை எறிதல்" போன்ற சில விளையாட்டுகளைச் சிறிது நேரம் மனமகிழ்ந்து விளையாடலானார்கள்.

"பாங்கிகாள்! இப்போது விளையாடின விளையாட்டுகள் எனக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் விளைவித் திருக்கின்றன. இச்சமயம் சென்று நான் என்னுடைய பாடத்தைப் படித்தால் விஷயங்கள் மனத்தில் நன்றாய்ப் பதியு மென்று நினைக்கிறேன். ஆதலால், வாருங்கள், நாம் கீழிறங்கிச் செல்வோம்" என்று குண்டலகேசி உரைத்தாள்.

"நல்லது! செய்வோம் அவ்விதமே; நேற்று உபாத்தியாயர் எப்பாடம் கற்பித்தார்! இன்று படிக்க

வேண்டுவது யாது?" என்று குணமாலை குண்டல கேசியை வினவினாள்.

"சகியே! நேற்று ஆசிரியர் மத்தியமநிகாயம் என்னும் நூலில் 'இவ்வுலகம் நிலையுள்ளதா? நிலையற்றதா?' என்று பகவான் புத்தரை நோக்கி மாலுங்கன் வினவிய பகுதியை எடுத்து விளக்கினார். இனறு, பிறவிகள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்துகொண்டிருக்கும் என்பதற்குக் கூறப்படும் வாயுசந்தானம், கூபசந்தானம், தாரா சந்தானம், பிப்லிகாசந்தானம் என்னும் நான்கு உதாரணங்களை விளக்கிக் காட்டுவதாகக் கூறியிருக்கின்றார்" என்று குண்டலகேசி கூறினாள்.

"அப்படியா? நன்று; நாம் கீழே இறங்கிச் செல்வோம்" என்று குணமாலை சொன்னாள்.

"தலைவியே! அன்று ஏதோ கனவு கண்டதாகக் கூறினையே?" என்று பத்மினி இரகசியமாய்க் குண்டலகேசியைக் கேட்டாள்.

"ஆ! அதை என் இப்போது ஞாபகப்படுத்தினாய்?" என்று மிகுந்த ஆரமையோடு குண்டலகேசி கூறினாள். மறு நிமிஷத்தில் அவள் மூர்ச்சித்துக் கீழே சாய்ந்தாள். அவளுடைய கண்கள் மாத்திரம் விழித்தபடியே சந்திரனை நோக்கின. அந்த மதிநோக்கும் மதிமுகத்தாளை மூன்று சேடியர்களும், அணைத்தபடியே, தூக்கிக்கொண்டு மாடியிலிருந்து கீழிறங்கினார்கள்.

# இரண்டாம் அதிகாரம்

## காளன் என்னும் கள்வன்

"செய்வினை வழித்தாய் உயிர் செலு மென்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரை யாதலின்."

—சிலப்பதிகாரம்

இவ்வுலகத்தில் எஞ்ஞான்றும் எங்கணும் தீயவெனச் சான்றோரால் கடிப்பட்டவையும்,—கடியப் படுபவையுமான இழிதொழில்கள் பலவற்றுள் களவு என்பதும் ஒன்றன்றோ? "களவென்னுஞ் சொற் கேட்டதுணையானே களவு தீதென்றலும், காமம் என்னுஞ்சொற்கேட்ட துணையானே காமந் தீதென்றலுங் கூடாவாம்; மற்றவை நல்லவாமாறும் உண்டு" என்று ஆசிரியர் நக்கீரனார், இறையனார் அகப்பொருள் உரையிற் கூறி, அதற்கு எடுத்துக்காட்டாக, உற்றொரு கலகம் விளைக்கு, விஷமருந்தி உயிர்துறக்கக் கருதி, ஒருவரு மில்லாத சமயத்தில் அருந்தும் நோக்கத் தோடு விஷத்தை வாங்கி மறைவாக வைத்திருந்த ஒருத்தியைக், காலன் கையினின்றும் விடுவிக்கும் நல் லெண்ணத்துடன், அவள் செயல் அறிந்த ஒருவன் அவளறியாமல், அவள் வைத்திருந்த விஷத்தை எடுத்து வெளியே கொண்டுபோய் உகுத்திட்ட செய்தியையும் எடுத் துரைத்தார். இத்தகைய செயல்கள் பிறர்க்கு நன்மையே பயத்தலாலும், செய்பவனுக்கு

நேரே பயனளியாமையானும் "களவு" என்னும் பகுதியிற் சொன்மாத்திரையே யன்றி, உண்மையில் அடங்காவாம். மற்று, பிறருடைய மனம் வருந்தும் படியும், பிறர்க்குச் சொந்தமான பொருள்களின் இழப் பினால் அவர்கள் பலவகையான கஷ்ட நஷ்டங்களை அடையும்படியும், பிறரை வஞ்சித்துத் தான் பயன டைய வேண்டு மென்னும் கெட்ட நோக்கத்துடன் பிறருடைய பொருளை அவர்களுக்குத் தெரியாமற் கவருவதுதான் "களவு" என்று சொல்லப்பெறும். இத்தகைய களவே, விழுமிய ஒழுக்கமுடைய நன்மக் களால் வெறுக்கப்படுகின்றது. "தீச் செயல்களைக் குறிக்கும் சொற்களை வாயாற் சொல்லுதலுங் கூடா தாம்" என்னுங் கொள்கையுடைய ஆசிரியர் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார், அச்செயல்களைக் குறித் துக் கூறநேர்ந்த விடத்தும், உடன்பாட்டுவகையால் அவற்றின் பெயரைக் கூறாமல், "அழுக்காறாமை," "இன்னாசெய்யாமை," "கள்ளுண்ணாமை," "பிறனில் விழையாமை," "பெரியாரைப் பிழையாமை" என்று எதிர் மறை முகத்தாற் கூறித், தங்கொள்கையைக் குறிப்பால் உணர்த்துதல் போலவே, களவைப்பற்றிச் சொல்ல நேர்ந்தபோதும் "களவு" என்று சொல்லு தற்கு உடன்படாராய்க் "கள்ளாமை" என்று கூறினா ரெனின், களவின் இழிவு இத்தகைய தென்பதை யாம் சொல்லவும் வேண்டுமோ? "பிறருடைமையா யிருப்ப தியாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை, கருதுதலும் செய்தலோ டொத் தலின், கள்ளாமை யென்றார்" எனப பரிமேலழகர்

திருக்குறள் 'கள்ளாமை' அதிகாரத்தின் உரையிற் கூறும் நுட்ப உரையை உற்று நோக்கும்போது, பிறருடைய பொருளைக் களவாட வேண்டுமென்று நினைத்தலுங் கூடாதாம் என்பது இனிது புலப்படுகிறதன்றோ? அங்ஙனமிருந்தும், இக்காலத்தைப்போலவே பண்டைக் காலத்திலும் கள்வர்கள் இருந்திருப்பதானது, சிலருக்கு ஆச்சரியத்தை விளைவிக்கும். ஆனால், இக்காலத்து வறுமையின் கொடுமையாலும், உணவுப் பொருள்களின் விலையேற்றத்தினாலும், உள்நாட்டுப் பண்டங்களின் வெளிச்செலவினாலும், பிறதேசப் பண்டங்களின் மிகுந்த விலையாலும், ஜனத்தொகைக்குத் தகுந்தபடி தொழிலின்மை காரணமாகவும், தொழின் முயற்சிக்குத் தகுந்தபடி ஊதியமின்மை காரணமாகவும் நேரும் வருவாய்க் குறைவினாலும், இன்னும் இவைபோன்ற பல காரணங்களாலும் தகுந்த யோக்கியதை யுடையவர்கள் சிலரும், கல்வியுடையவர்கள் சிலருங்கூட, "தான் தான் ஜீவிக்க முயலல்" என்னும் டார்வின் (Darwin) கொள்கையைப் பின்பற்றித் தங்கள் மதிப்பையுங் கௌரவத்தையும் பலியிட்டாவது தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாய்க் களவைக் கைக்கொள்ளும் கொடிய தன்மைக்கு உள்ளாகிறார்கள். இந்தியாவின் வடபாகத்தில் எண்ணிறந்த பகற்கொள்ளைகளும், தீவர்த்திக் கொள்ளைகளும் பிரதிதினமும் நடக்கின்றனவென்று நாம் பத்திரிகை வாயிலாய் அறிவதே, இவ்வுண்மையை நாட்டுதற்கு உறுஞ் சான்றும். தவிர்த்தும், பொதுஜனங்களின் உடற் பாது

காப்பு, பொருட் பாதுகாப்பிற்காக அரசாங்கத்தாரால் நியமிக்கப் பெற்றுள்ள 'போலீஸ்' இலாகாவின் வேலை, வாவா இருந்த விடத்திலிருந்தபடியே எழுத்து மூலமாய் நிறைவேற்றப்படும் வேலையாய் விட்டபடியாலும், அவ்விலாகா உத்தியோகஸ்தர்களின் சுற்றுப்பிரயாணமே பெரும்பாலும் நின்று, கையிலிருக்கும் அறிக்கைகளுக்கோ உடனுக்குடன் எவ்விதமாகவாவது பைசல் செய்து ஒழுங்காக மேலதிகாரிகளுக்கு அறிவித்தல் வேண்டுமென்னும் கொள்கை மாத்திரம் பாவிவருகிறபடியாலும், நடந்த களவுகள் கண்டு பிடிக்கப்படாமற் போவதோடு, நடக்கும் களவுகள் நாளுக்கு நாள் அபிவிருத்தியாகியும் இக்காலத்தில் வருகின்றன. பண்டைக் காலத்திலேயோ, இத்தகைய களவுகள் நிகழ்ந்தில. களவு செய்வதைத் தங்கள் குலத்தொழிலாகக் கொண்டவர்களும், கல்வியறிவும் நல்லவர்களின் கூட்டுறவுமில்லாமல், அறியாமையால் மறச்செயலைக் கைக்கொண்ட சிலருமே பண்டைக் காலத்திற் களவாடுவதை மேற்கொண் டொழுகினார்கள்.

இத்தகைய களவினை அக்காலத்தில் மேற்கொண் டொழுகினவர்களுள் காளன் என்னும் பெயருடையானும் ஒருவனாவன். இவன் வைசிய குலத்திலுதித்தவனாயிருந்தும், இயல்பும் அந்தஸ்தும் இனிது வாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவனா யிருந்தும், இளம்பருவம் தொடங்கியே இவன் கொடிய ஆறலை கள்வர்களுடனும் கொள்ளைக்காரர்களுடனும், மதுவுண்போருடனும், சூதாடிகளுடனும், பொதுமகளிரின் விழைச்சியைப் பெரிதும் விரும்புகின்ற காமுகர்களுடனும் நட்புரிமை

பூண்டு அவர்களோடு சேர்ந்து உண்பதும் உடுப்பதும்,
அளவளாவுவதும் மனமகிழ்வதுமாக இருந்தவந்தானு
தலின், அவர்கட்குரிய தீய குணங்களும் செயல்களும்,
“நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும் மாந்தர்க்கு இனத்
தியல்பதாகு மறிவு” என்னும் பொய்யா மொழிப்படி.
இவனுக்கு நாளடைவில் படியலாயின. முதலில் தன்
வீட்டிலுள்ள சிறுபண்டங்களை இவன் தன் பெற்றோர்
களுக்குத் தெரியாமற் களவாடி, அவைகளைப் பிறரிடம்
அடகு வைத்தும், பிறர்க்கு விற்றும் பொருள் வாங்கி
அதனைத் தீயவழியிற் செலவிடுவதற்குத் துவங்கினன்.
இச்செயல் நாளடைவில் முதிர்ந்து இவனுடைய வீட்
டிலுள்ள விலையுயர்ந்த இரத்தின ஆபரணங்களையும்,
பொற்பணிகளையும், பெருந்தொகையான பொருளையும்
கொள்ளையடிக்கும்படி இவனைத் தூண்டிற்று. இக்
காளன் என்பான் சிற்சில சமயங்களில் தன்னுடைய
தோழர்களான கள்வர்களுக்குத் தானே உளவறிவித்
துத் தன் வீட்டிற் கொள்ளையிடும்படி வற்புறுத்தி,
பிறகு அக்கொள்ளைப்பொருளில் தனக்குரிய பாகத்தை
மகிழ்ச்சியுடன் பெற்று மகிழ்ந்திருக்கிறானென்றால்,
அவனுடைய தீய ஒழுக்கத்தைப்பற்றி நாம் அதிகம்
சொல்லுவானேன்?

இவனை நன்மார்க்கத்திற் றிருப்புதற்கு இவனு
டைய பெற்றோர்கள் பலவாறு முயன்றும், அவர்கள்
முயற்சி சிறிதும் பயன்படவில்லை. இவனால் தன்னு
டைய நற்பெயருக்கும், தன் குலத்தின் கௌரவத்திற்
கும், தன் குடும்பத்தின் மதிப்பிற்கும் பங்கம் விளைகிற

தென்பதை நன்கறிந்த இவன் தந்தை "குலத்தைக் கெடுக்கும் கோடரிக் கொம்பாக" இவனைக் கருதித் தன் வீட்டிற்குள் நுழையவே கூடாதென்று இவனுக்குக் கண்டிப்பான உத்தரவுசெய்ததோடு, அக்காலத்து வழக்கப்படி, உற்றார் உறவினர்கள் அறிய இவனைச் சாதிப்பிரஷ்டமும் செய்வாராயினர். இங்ஙனம் செய்த அவருடைய செயல் இவனுக்குப் "பழம் நழுவிப் பாலில் விழுந்தது" போல் ஆயிற்று. ஒரு சிறிதிருந்த மானத்தையும் அச்சத்தையும் இப்போது இவன் அறவே ஒழித்துவிட்டான். பிறருடைய வீடுகளில் கன்னம் வைத்துத் திருடவும், பகற் கொள்ளையிடவும் இவன் ஆரம்பித்துவிட்டான். தவிர, பௌத்தசமயத்தை மேற் கொண்டு, பௌத்த சந்நியாசிபோல் வெளிவேடம் பூண்டு, இவன் வழிப்போக்கர்களுக்கும் சாதுக்களுக்கும் இழைத்துவந்த இன்னல்கள் பலவாகும். அதிகம் சொல்லுவானேன்? இவனால் பொது ஜனங்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கலானார்கள்.

இக்காளன் என்பான் காவிரிப்பூம்பட்டினத்தின் புறத்தே இருக்கும் குறுங்காட்டினுள் ஒருநாளிரவு இடையாமத்தில் வேறு மூன்று கள்வர்களுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தான். முதல் நாளிரவு இவர்கள் நால்வரும் சேர்ந்து அரசனுடைய மாளிகையில் கொள்ளையடித்த நகைகளையும் நாணயங்களையும் பங்கிட்டுக் கொள்ளுதல் சம்பந்தமாக அச்சம்பாஷணை இருந்தது.

"நான் வெளியில் நின்று காவல்புரிந்தேனே?" என்றான் மாடன்.

"கன்னம் வைத்தது நான் அன்றோ?" என்றான் இருளன்.

"முதலில் மாளிகையுள் நுழைந்து நகைப்பெட்டி இருந்த இடத்தைக் கண்டுபிடித்துக் கூறியது நானே வேன்" என்றான் முனியன்.

"தைரியத்தோடு பெட்டியை உடைத்துப் பொருள்களைக் கைக்கொண்டவன் நானேயாதலால், எனக்கே அதிகமான பாகம் கிடைக்க வேண்டும். ஐந்து சம பாகமாகப் பிரித்து, இரண்டை நான் எடுத்துக்கொள்வேன். நீங்கள் மூவரும் தலைக்கொரு கூறாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்று காளன் சொன்னான்.

"ஏன்; ஏன்?" எனக் கூவினான் முனியன்.

"கூடாது; கூடாது!" என்றான் இருளன்.

"முடியாது; முடியாது!" என்றான் மாடன்.

"வேலைக்குத் தருந்த கூலிதானே?" என்றான் காளன்.

"நான் கஷ்டப்படவில்லையோ?" என்றான் முனியன்.

"நான் கன்னம் வைக்காதிருந்தால், நீ எவ்விதம் உட்செல்ல முடியும்?" என்றான் இருளன்.

"நான் வெளியில் நின்று ஆள் பார்க்காமலிருந்தால் நீங்கள் தப்பித்து வந்திருக்கமுடியாதே?" என்றான் மாடன்.

"ஏன் வீணாக வார்த்தை யாடுகிறீர்கள்? நான் சொல்லுகிறபடிதான் செய்யவேண்டும்" என்றான் காளன்.

“இணங்கோம்; இணங்கோம்!”

“ஒப்போம்; ஒப்போம்!”

“இசையோம்; இசையோம்!”

இவ்விதமாக ஏனைய மூவரும் தனித்தனிக் கூவினார்கள். இவர்களுக்குள் கலகம் ஆரம்பித்துவிட்டது. குடிவெறியால் ஒருவனை ஒருவர் திட்டுவதும் புடைப்பதும், அடிப்பதும் உதைப்பதுமாக விருந்தார்கள். இவர்கட்குச் சமீபத்தில் சருகுகளும் செத்தைகளும் சேர்ந்த குப்பல் ஒன்று எரிந்துகொண்டிருந்தது. குளிர் காய்வதற்கும், மான் மரை முதலிய விலங்குகளைக் கொன்று, சுட்டு உண்பதற்கும் சாதகமாய் இவர்களே அந்தக் குப்பலை ஏற்றிக்கொண்டார்கள். இவ்வெளிச்சம் சுமார் ஒரு மைல் சுற்றளவிற்குத் தெரியக்கூடியதுதான்.

இவ்வெளிச்சத்தை நோக்கி நால்வர் அன்றிரவு வந்துகொண்டிருந்தார்கள். இவர்கள் அரசனுடைய கட்டளைப்படி, முதல் நாளிரவு அரண்மனையில் திருடிய கள்வர்களைக் கண்டுபிடிப்பதற்குப் புறப்பட்ட நகர் காவலர்களாவார்கள். இவர்களுள் ஒருவன் காவற்றலைவன்; ஏனைய மூவரும் அவனுக்குட்பட்ட காவலர்கள். எரிந்துகொண்டிருந்த குப்பலுக்குச் சமீபமாய் இவர்கள் சென்றவுடன், அங்கே சச்சரவு செய்துகொண்டிருந்த கள்வர்கள் நால்வரும் நாற்றிசையும் நோக்கி ஓடலானார்கள். அவர்களைப் பின்தொடர்ந்து இக்காவலர்கள் சென்றார்கள். காளன் மாத்திரம் இவர்களுடைய காத்திலகப்பட்டான்; ஏனைய மூவரும் இவர்கள் கண்ணிற்கும் காத்திற்கும் அகப்படாமல் மறைந்து ஒழிந்தார்கள். தங்களிடம் அகப்பட்டுக் கொண்ட காளனுக்கு அவ்விடத்

திலேயே விலங்கிட்டு அவனை அரசனிடத்திற்கு அழைத்துச் செல்லக் காவலர் நால்வரும் முதலிற் கருதினார்கள். ஆனால், கள்ளன் தான் யாரென்பதையும், தன்னுடைய தந்தையின் பெயரையும் அவர்களிடம் சொன்ன மாத்திரத்தில், அவனது தந்தையிடம் தங்கட்கிருந்த மதிப்பினால், இக்காலத்தில் போலீஸ் சேவகர்கள், கைதியாக அகப்பட்டவர்களை அநாவசியமாக அருவருக்கத் தகுந்த இழி சொற்களை வாய்கூசாமற் கூறித் தூஷித்தல்போல் தூஷியாமலும், இரக்கமென்பதும் உணர்ச்சி என்பதும் மருந்திற்கு மின்றி அவர்களைத் தங்கள் பலங்கொண்டவரையில் அடித்தும் உதைத்தும் துன்புறுத்தல் போல் துன்புறுத்தாமலும், மிக்க மரியாதையுடனும் கௌரவத்துடனும் விலங்கிடாமலே அவர்களவனை அழைத்துச் சென்று, அரசன் முன்னிலையில் நிறுத்தினார்கள். மறுநாள் அரசன் கள்ளனை விசாரணை புரியத் தொடங்கினான்.

“ஏ! கள்வனே, நீ நேற்றிரவு நம்முடைய அரண்மனையில் கன்னம் வைத்துச் சில ஆபரணங்களைத் திருடிச் சென்றதுண்டா?” என்று அரசன் கள்ளனை நோக்கிக் கேட்டான்.

கள்ளன் ஏதும் பதில் கூறாமல் மௌனம் சாதித்தான். காவலர் தலைவன் சில ஆபரணங்களையும் நாணயங்களையும் ஒரு துணி முடிப்பிலிருந்து அவிழ்த்து எடுத்து, “மகாராஜாவே! இவை இவர்கள் பங்கு போட்டுக் கொள்தற்குக் கூடுகின்ற இடத்திலிருந்தன” என்று மிகுந்த பணிவுடன் கூறி, அவைகளை அரசன்

சமுகத்தில் வைத்தான். அவைகளை அரசன் கையில் எடுத்துப் பார்த்துவிட்டு "ஓ! இவை நிச்சயமாய் நம் அரண்மனையிலிருந்தவைதாம்!" என்று அதிசயத்துடன் கூவிக் காளனை நோக்கி "ஏ! கள்வனே, இப்போ தென்ன சொல்லுகிறாய்? கையுங் களவுமாய் உன்னைப் பிடித்த பின்னர் நீ உண்மையை மறைக்க முடியாது. நேற்றிரவு இவைகளை நீ களவாடினாய் என்பது நிச்சயமே. உன் குற்றத்தை நீ ஒப்புக்கொள்ளுகின்றனையா இல்லையா?" என்று இரண்டாம் முறை வினவினான். இந்தக் கேள்விக்கும் காளன் மௌனமே சாதித்தான்.

"நான் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல உனக்கு இஷ்டமில்லையா, என்ன?" என்று மீண்டும் ஒரு முறை அரசன் காளனை நோக்கி உசாவினான். இக் கேள்விக்கும் காளன் மௌனவிரதமே பூண்டான்.

"கள்வனே! நான் மூன்று முறை உன்னை வினவியும், நீ ஏதும் பதில் கூறாமல் மௌனம் சாதித்தாய். 'மௌனம் சாதிப்பது சம்மதம் அறிவிப்பது போலாம்' என்பதை அறியாயோ? நீ கள்வன் என்பதையும் இவைகளைத் திருடியவன் நீயே என்பதையும் உன்னுடைய மௌனவிரதம் நன்கு புலப்படுத்துகின்றது. ஆதலால் உன்னை நான் தண்டிக்கப் போகின்றேன்" என்று அரசன் ஆத்திரத்தோடு கூறினான்.

"அரசனே, மேலவீதி கொலைக் குற்றத்தில் சம்பந்தப்பட்ட எழுவருள், இவனும் ஒருவனாவான். இது வரை இவன் மறைந்து திரிந்தபடியா லிவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அக்குற்றத்தில் சம்பந்தப்பட்ட

ஏனைய அறுவரும் சிறைச்சாலையி லிருந்துவருகின்றார்கள் அந்தப் பெண்மணியை, அவளணிந்திருந்த ஆபரணங்களை அபகரிக்கவேண்டி, இவனே தன்னுடைய கையினால் குத்திக்கொன்றான் என்றும், அவர்கள் இவனுக்கு உதவியாக மாத்திரம் இருந்தார்கள் என்றும் அவர்களுடைய வாய்மொழிகளாலே நாம் அறிகிறோம். ஆதலால், அந்தக் குற்றம் சம்பந்தமாயும் இவனை விசாரித்து, இவன் கொலைசெய்தா னென்று ருஜுவானால், கொலைக் குற்றத்திற்குரிய கடுந்தண்டனையும் இவற்கு விதிக்க வேண்டுவது செங்கோன் முறையும், இராஜ தருமமு மாகும்" என்று அரசன் பக்கலில் நின்ற பிரதம மந்திரி இத்தருணத்தில் மன்னனுக்கு எடுத்துரைத்தார். கொலையுண்ட பெண்ணின் வீட்டினிலுள்ளவர்களுக்கும், மற்றுஞ் சிலருக்கும் "விசாரணை அறிக்கை" அனுப்பி வரவழைத்தும், சிறைச்சாலையிருந்த ஆறு குற்றவாளிகளையும் நியாய விசாரணை மண்டபத்திற்குக் கொண்டுவரும்படி செய்தும் அரசன் இக்கொலைக்குற்றத்தைப் பற்றிப் புனர் விசாரணை செய்தான். காளனே அப்பெண்மணியைக் கொன்றா னென்பது, இவ்விசாரணையில் ஐயந்திரிபற ருஜுவாகிவிட்டது.

"காவலர்காள்! இவனைச் சிறைச்சாலையி லடைத்து வைத்திருந்து, இன்றை எட்டாம் நாள் கொலைக் களத்திற்குக் கொண்டுபோய், இவன் சிரசைச் சேதித்து விடுங்கள்!" என அரசன் ஆணைதந்தான். "கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்—தள்ளாது

புத்தே ளுலகு" என்னும் பொய்யா மொழிக்குக் காளன் என்னும் கள்வன் இலக்காயினன்.

ஒருவன் எவ்வளவு சாமர்த்தியசாலியாக இருந்த போதிலும், எவ்வளவு மனோதிட முடையவனாக இருந்தபோதிலும், சரீரவன்மை யுடையவனாக விருந்த போதிலும் அவன் அக்குணங்களை நற்காரியங்களில் உபயோகப்படுத்தாமல் களவு, கொலை முதலாய தீய செயல்கள் புரிவதில் உபயோகப்படுத்துவானேயானால், அக்குணங்கள் அறக்கடவுளுக்கு உதவியாக நின்று அவனையே தண்டிக்கும் என்னும் உண்மையைக காளன் இப்போது இனிதறிந்தான்.

## மூன்றாம் அதிகாரம்

### ஆசிரியர் அருக்கசந்திரனார்

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றோர் உறுவது அறிக".—மணிமேகலை.

அவந்தி தேசத்தின் தலைநகராக அக்காலத்திலிருந்த உஞ்சைமா நகரினைச் சேர்ந்தவரும், சாஸ்திர ஆராய்ச்சி நிரம்ப வாய்ந்தவரும், பௌத்த சந்நியாசியாயிருந்து பௌத்த மதத்தைப்பற்றி ஊர்கடோறுஞ் சென்று உபந்நியாசங்கள் புரிவதையே தம் தொழிலாகக்கொண்டவரும், ஒழுக்கமும் சீலமும் இனிதமைந்தவருமான அருக்கசந்திரன் என்னும் பௌத்த சந்நியாசி, பல தேசங்களையும் சுற்றிக்கொண்டு சோழனுடைய தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்து அங்கே சிறிது காலம் வசிவாராயினர். இவருடைய கல்வித் திறனையும், சாத்திர ஆராய்ச்சியையும், பிரசங்க ஆற்றலையும், விழுமிய ஒழுக்கத்தையும் நாளடைவில் கேள்வியுற்ற பொதுஜனங்கள், இவரைப் பெரிதும் போற்றி ஆதரிக்கத் தொடங்கினர். இவரைப்பற்றிக் கேள்வியுற்ற குண்டலகேசியின் தந்தை, தன்னுடைய புத்திரிக்கு வித்தியாப்பியாசமும் தருமோபதேசமும் செய்விக்கும்படி இவரை வேண்டிக்கொண்டார். தம்முடைய மதத்திற்கும் கொள்கைக்கும் இன்றியமையா

தகான பரோபகார சிந்தையைப் பெரிதும் பெற்றிருந்த அருக்கசந்திரனுர், அவருடைய வேண்டுகோளுக்குப் பெரிதும் இணங்கி இலவசமாகவே குண்டலகேசிக்கு வித்தியாப்பியாசம் செய்வித்தற்கு ஒருப்பட்டனர். அன்று முதல் இவர் பிரதிதினமும் குண்டலகேசியின் மாளிகைக்குச் சென்று, அவளுக்கு அறநூல்களைப் போதித்து வந்தார். குண்டலகேசி தலையாணுக்கரினுஞ் சிறந்த தீவிர பக்குவமும் நுண்ணுணர்வும வாய்ந்தவளாதலால், அவருடைய போதனையைக் கவனமாய் மனத்தில் வாங்கி உளத்தில் அழுத்தினுள். குண்டலகேசி மாடிமீது மூர்ச்சித்து விழுந்த அன்றிரவும் அருக்கசந்திரனுர், வழக்கம்போலவே, அவளுக்குப் பாடம் சொல்லுவதற்காக வந்தார். சேடியர்கள் பனிநீர் தெளித்தும், விசிறிகொண்டு விசிறியும், இன்னும் பல உபசாரங்களைச் செய்தும், குண்டலகேசியின் மூர்ச்சை தெளிவிக்க முயன்றுகொண் டிருந்தார்கள். இதனை அறிந்த அருக்கசந்திரனுர் சில மந்திரங்களை ஜபித்துத் தண்ணீரை அவள் முகத்திற் படும்படி தெளிக்கவே, அவள் நித்திரையிலிருந்து விழிப்பவள்போல் எழுந்துட்கார்ந்தாள். அவள் களையினை ஆற்றிப் பிறகு அவளுடைய பாடத்தைக் கேட்கவும், புதுப் பாடம் சொல்லிக் கொடுக்கவும் அருக்கசந்திரனுர் தொடங்கினுர்.

"குழந்தாய், 'இந்த உலகம் நிலையுள்ளதா நிலையற்றதா ?' என்று பகவான் புத்தரை நோக்கி மாலங்கன் வினவியதற்கு, அவர் யாது பதில் அளித்தனர் ?" என்று அருக்கசந்திரனுர் குண்டலகேசியை உசாவினுர்.

"மறுமொழி ஏதும் பகராமல் மௌனம் சாதித்தார்" என்று குண்டலகேசி விடை தந்தாள்.

"அவ்விதம் அவர் மௌனம் சாதித்ததின் கருத்தியாது?" என்று ஆசிரியர் வினவினர்.

"அத்தகைய வினாக்களும் ஆராய்ச்சியும் பயனற்றவை என்பதே பௌத்தருடைய கருத்தாகும்" என்றாள் குண்டலகேசி.

"இன்று உனக்கு எந்த விஷயத்தைப் பற்றிப் போதிப்பதாக நேற்று நான் கூறினேன்?" என்று அருக்கசந்திரனார் கேட்டார்.

"பிறவியைப்பற்றியும், அதற்குக் கூறப்படுகின்ற நான்கு வகை உதாரணங்களைப்பற்றியும் விளக்குவதாகச் சொன்னீர்கள்" என்றுகுண்டலகேசி கூறினாள்.

"ஓ! அப்படியா? சரி, சொல்லுகிறேன். நீ கவனமாய்க் கேள்" என்று அருக்கசந்திரனார் கூறி, மீண்டும் குண்டலகேசியை நோக்கிக் "குழந்தாய்! சேதன அறிவுப் பொருளான ஜீவராசிகள், ரூபம், வேதனை, ஸம்ஜ்ஞை, ஸம்ஸ்காரம், விஜ்ஞானம் என்னும் ஐந்து ஸ்கந்தங்களால் உண்டாகின்றன" என்று கூறினார்.

"ஸ்கந்தம் என்றால் என்ன?" என்று குண்டலகேசி கேட்டாள்.

"ஸ்கந்தம் என்னும் பதத்திற்குக் கூட்டம் என்று பொருள். ரூபம் என்பது உருவத்தையும், வேதனை என்பது நுகர்ச்சியையும், ஸம்ஜ்ஞை என்பது குறியீட்டையும், ஸம்ஸ்காரம் என்பது பாவனையையும், விஜ்ஞானமென்பது அறிவையும் குறிப்பனவாகும்" என்று அருக்கசந்திரனார் கூறினார்.

"அடிகாள், இன்னும் விளங்க உரைத்தால் நலம்' என்று குண்டலகேசி கூறினள்.

"குழந்தாய், அவ்விதமே விளங்க உரைக்கின்றேன்; கேட்பாயாக! ரூபஸ்கந்தம் என்பது, உருவங்களுக்கெல்லாம் காரணமாகிய பொருட் கூட்டங்களைத் தெரிவிப்பதாகும். நிலம், நீர், நெருப்பு, காற்று என்னும் நான்கு பூதங்களும், ஐந்து ஞானேந்திரியங்களும், ஐம்புலன்களும், ஆண்பெண் பாகுபாடும் இவை போன்ற பிறவுமாகிய இருபத்தெட்டு தத்துவங்களின் தொகுப்புக்கு ரூபஸ்கந்தம் எனப் பெயர்" என்றார் அருக்கசந்திரனர்.

"வேதனு ஸ்கந்தம் என்பது யாது?" என்று குண்டலகேசி வினவினள்.

"குழந்தாய்! இந்திரியங்களுக்கும் புலன்களுக்கும்,—அதாவது, உதாரணமாகக் கண் என்னும் இந்திரியத்திற்கும் உருவம் என்னும் புலனுக்குமுள்ள சம்பந்தம்போன்ற,— சம்பந்தம் ஏற்படுங்கால் தோன்றும் உணர்வே வேதனுஸ்கந்தம் என்று சொல்லப் பெறும். ஐம்பொறிகளும் மனமும் இந்தப் பகுதியுள் அடங்கும். இந்த ஆறு இந்திரியங்களால் உண்டாகின்ற அறுவகைப்பட்ட உணர்வுக்குச் சம்பந்தமுற்று, அந்த உணர்வினல் உண்டாகும் பொதுவறிவையும் சிறப்பறிவையும் ஆதாரமாய்க் கொண்டு பதார்த்தங்களுக்குப் பெயரிட்டு அவைகளைக் குறித்துக் காட்ட இன்றியமையாது வேண்டப்படும் ஞானமே "ஸம்ஜ்ஞாஸ்கந்தம்' என்று சொல்லப்படும். மனம் வாக்கு, காயம் என்னும் திரிகாணங்களால் உண்டா

கும் தொழில் வேறுபாட்டினால், அவைகளுக் கேற்படும் பரிபாக விசேஷமே 'ஸம்ஸ்கார ஸ்கந்தம்' என்று பெயர் பெறும். 'விஜ்ஞான ஸ்கந்தம்' என்பது உறங்குவோன் உணர்வு கர்த்திருத்துவம், போக்திருத்துவம் இரண்டு மில்லாமல் சாக்ஷி மாத்திரையாய் இருத்தல் போல, சேதனர்களுடைய தேகத்துள்ளிருந்து, அவர்களுடைய அறிவிற்கு ஆதாரமாய் நிற்கும் சைதன்னிய தத்துவ நிலையாகும். இந்த ஸ்கந்தங்கள் ஐந்தும் நிலையற்றன. இவை முறையே நுரை போலும், நீர்க்குமிழி போலும், கானல் ஜலம்போலும், வாழை போலும், இந்திர ஜாலம் போலும் தோன்றி மறையும் இயல்புடையன" என்று அருக்கசந்திரனார் கூறினார்.

“அண்ணலே! இவ்விஷயங்க ளெல்லாம் எனக்கு இனிது விளங்கின. ஆனாலும், இன்று பிறவியைப் பற்றிக் கூறி, என் அறியாமை நீக்குவதாகச் சொன்னீர்களே? அவ்விஷயத்தை விடுத்து, ஐந்து ஸ்கந்தங்களைப் பற்றிக் கூறப்புகுந்ததன் நோக்கம் யாதோ?” என்று குண்டலகேசி உசாவினாள்.

“சிறுமியே, அவசரப்படாதே! பிறவியைப் பற்றிச் சொல்லுவதற்காகவே, நான் முதலில் இவைகளைக் கூறினேன். குழந்தாய்! 'ஜாதஸ்ய மரணம்' த்ருவம் என்றபடி பிறந்தவனுக்கு மரணம் நிச்சய மன்றோ? மனிதன் இறந்துபோன பின்னர் அவனைச் சேர்ந்த இவ்வைந்து ஸ்கந்தங்களும் தனித்தனியே பிரிந்து விடுகின்றன. ஆனால், உயிரோடிருந்தபோது அவன் செய்து வந்த நல்வினை தீவினைகள் விஜ்ஞான ஸ்கந்தத்தில்

விதையைப்போல் சூக்குமமாய் உள்ளடங்கியிருந்து, அந்த விஞ்ஞானத்தைத் தமக்கு ஏற்ற முறையில் ஏனைய நான்கு ஸ்கந்தங்களோடு மீண்டும் கலப்பித்து மறு பிறப்பை அடையச் செய்கின்றன. ஆகவே, வினையே பிறப்பின் மூலமென்பதும், கன்மம் இருக்கும் வரையில் பிறப்பும் இறப்பும் இருந்துகொண்டே இருக்கு மென்பதும் புலனாகின்றன" என்று ஆசிரியர் கூறினார்.

"குருவே, பிறவிக்குக் காரணம் அறிந்தேன். வாயுசந்தானம் முதலாகக் கூறப்படும் நான்கு உதாரணங்களையும் விளக்குவதாக நேற்றுக் கூறினீர்களே?" என்று குண்டலகேசி வினவினாள்.

"ஆம்; சொல்லுகிறேன், கேள்! காற்றானது பிரிந்து நில்லாமல் தொடர்புற்றுச் செல்லுதல் போல், பிறவியானது ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்து வரும். இந்தக் காற்று உபமானந்தான் வாயுசந்தானம் என்று நம் முன்னோரால் கூறப்பட்டது. ஒரு விளக்கிலிருந்து எண்ணிறந்த தீபங்கள் ஏற்றப் பெறுதல் போல், ஒரு பிறவியிலிருந்து பல பிறவிகள் உண்டாக்கப் படுகின்றன. இந்த உவமானமே தீபசந்தானம் எனப்படும். ஓர் ஆற்றில் நீர் ஓடிக்கொண் டிருக்கும்போது, ஓரிடத்து ஒரு கணத்தே காணப்பட்ட நீர், மறுகணத் தவ்விடத்தே நில்லாவிட்டாலும், ஆற்றின் ஜலவோட்டம் ஒன்றாய்க் காணப்படுதல் போல், வரும் பிறப்புகளின் தொடர்பு ஒன்றாகவே யிருக்கும். இந்த உவமானம் தாரா சந்தானம் (தாரை=நீர்ப்போக்கு) எனப் பெயர் பெறும். எறும்புகள் குறித்த இடத்தை அடை

கிற வரையிலும், ஏறியும் இறங்கியும் வளைந்தும் சென்ற போதிலும், ஒன்றின் பின் ஒன்றாய்ச் செல்லுதல் போல, வினை நீங்கும் வரையிலும் உயர்ந்தும் தாழ்ந்துமான பிறவி இருந்துகொண் டிருக்குமாயினும், அப்பிறவி தொடர்புற்று நிற்கும். இந்த உபமானந் தான் பிபீலிகா சந்தானம் (பிபீலிகை=எறும்பு) எனப் படும். மனிதர்கள் புரியும் நல்வினை தீவினைக்கு ஏற்ப,

"மக்களுந் தேவரும் பிரமரு நரகருந்
தொக்க விலங்கும் பேயு மென்றே
நல்வினை தீவினை யென்றிரு வகையாற்
சொல்லப்பட்ட கருவிற் சார்தலும்"

என்றபடி, மக்கட்கதி, தேவகதி, பிரமகதி, நரககதி, விலங்குகதி, பேய்க்கதி என்னும் ஆறு கதியினுள் ஒன்றை அடைவார்கள். குழந்தாய்! இதுவரை, புத்த பகவான் அருளிச்செய்த மானஸீக சாஸ்திரக் கொள்கைகளுள் இரண்டொன்றை நான் சுருக்கமாக உனக்கு எடுத்துரைத்தேன். இத்தகைய விஷயங்கள் மனதிற் பதிதல் கடினமாதலாலும், அதிகம் கூறினால் இரசிக்கா வாதலாலும், எளிதில் விளங்கா வாதலாலும், இன்று இவ்வளவோடு நிறுத்திக் கொண்டு, எளிதில் விளங்கக் கூடியவையும், உன்னைப்போன்று இல்லற தருமத்தில் இருப்பவர்களுக்கு அவசியமானவையுமான இல்லற தருமங்கள் இரண்டொன்றைக் கூறுகிறேன். கேட்பாயாக!" என்று அருக்கசந்திரனார் கூறினார்.

"குருவே, அவ்விதமே சொல்லுங்கள்" என்று குண்டலகேசி ஆர்வத்தோடு உரைத்தாள்.